வெளியீடு எண் 303.

# இலக்கணவிளக்கச்சூறாவளி



திருவாவடுதுறை ஆதீனம்
1978

உ
சிவமயம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத்
திராவிடமாபாடிய கர்த்தராகிய

# ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்
## 194-வது குருபூஜை விழாமலர்

காலயுக்தி – சித்திரை – ஆயில்யம்

17—4—78

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை. —

வெளியீடு எண் 303.

உ

சிவமயம்

# இலக்கணவிளக்கச்சூறாவளி

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்

1978

சீலநிகழ் மூலவா கமப்பொருளொன் றென்றாகித்
திறம்புறாது
ஞாலநிகழ் குலதெய்வ மெனப்பலருங் கொண்டாட
நாங்க ளுய்யச்
சாலநிகழ் சமவாத முதலியபோ யொளித்திடவு
தயமாய் வந்த
பாலநிகழ் விழிமறைத்த சிவஞான யோகிபதம்
பணிந்து வாழ்வாம்.

—ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.



ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

உ
சிவமயம்

# முகவுரை

தமிழ் மொழியில் மிகப்பழமையான இலக்கண நூலாகப் போற்றப்படுவது அகத்திய முனிவர் இயற்றிய பேரகத்தியம் என்னும் நூலாகும். அது முழுவதுமாக நமக்கு இதுபொழுது கிடைக்கப்பெறவில்லை. அகத்தியர் மாணவர் பன்னிருவருள் தலைமைபெற்ற மாணவர் தொல்காப்பியர், இவர் சீகாழியை அடுத்த, காப்பியக்குடி என்னும் ஊரில் தோன்றியவர். இன்றும் அவ்வூர்ச் சிவன்கோயிலில் இவருடைய உருவம் உளது. தொல்காப்பியரால் இயற்றப்பட்டதே தொல்காப்பியம். இதுவே தமிழ்மொழிக்குக் கடைச்சங்ககாலமுதல் ஆதாரமான பேரிலக்கணமாயுளது. 'தொல்காப்பியம் கற்று வல்லோர்க்கன்றி மற்றையோர் அறிதற்கு அரிதாயிற்று.

கடலனைய தொல்காப்பியத்தை அடுத்துத் தமிழில் தோன்றிய இலக்கண நூல் பவணந்திமுனிவர் செய்த நன்னூல் ஆகும். இவர் எழுத்தையுஞ் சொல்லையுமே தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டும் வடமொழி இலக்கணங்களைத்தழுவியும் சுருங்கிய நூலாகச்செய்தனர். இந்நூலுக்கு ஆதீனமரபையொட்டிச் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரையும், மாதவச்சிவஞான யோகிகள் புத்தம் புதிய விருத்தியுரையும் ஆக்கியுள்ளனர்.

தொல்காப்பியத்தின் அருமையும், நன்னூலின் சுருங்கிய நிலையும் கண்டு திருவாரூர் வைத்தியநாததேசிகர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்துபகுதியினையும் உடைய இலக்கணவிளக்கம் என்னும் நூல் யாத்து அதற்கு உரையும் எழுதியுள்ளார்.

திருவாவடுதுறை இலக்கண இலக்கிய, சாத்திர தோத்திரங்களில் வல்ல பெரும்புலவர்களைத் தோற்றுவித்த தலைமை இடம் என்பது தமிழறிந்தார் அறிந்ததாகும். அத்திருமடத்தின் தவக்கொழுந்தாய் விளங்கியவர் சுவாமிநாததேசிகர். இவரது வரலாறு 1864-ம் ஆண்டு ஆறுமுகநாவலர் பதிப்பித்த இலக்கணக்கொத்து நூலில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

இலக்கணக்கொத்து என்னும் இலக்கண நூலையும் தசகாரியம் முதலிய ஞானநூல்களையும் யாத்த சுவாமிநாத தேசிகர் திருவாவடுதுறையில் சீரும் சிறப்புமாக விளங்கி இருக்கும் காலத்திலே திருவாரூரில் தோன்றி இலக்கண விளக்கம் என்னும் நூல் இயற்றிய வைத்தியநாத நாவலர் ஒரு நாள் ஆதீனத்துக்கு வந்தார். ஞானதேசிகரைக் கண்டார். கலந்து உரையாடிக்கொண்டிருந்தார். பின்பு பந்தியிற் போசனஞ் செய்யும்பொழுது "வந்தவிளைப்பாற போசனஞ் செவ்வையாகச் செய்தற்கிசைய வில்லையோ" என்று ஞானதேசிகர் வைத்தியநாத நாவலரைப் பார்த்துக் கேட்க, அவர் வந்த விளைப்பென்னுந் தொடர்மொழிக்கு இலக்கணம் விசாரிக்கத் தொடங்கினர். அப்பொழுது சேட்ட கனிட்ட முறைப்படியே பந்தியின் கடைசியிலே போசனஞ்செய்து கொண்டிருந்த இந்நூலாசிரியர் மீது ஞானதேசிகர் திருக்கண் சாத்தியருள, உடனே இந்நூலாசிரியர் வைத்தியநாத நாவலரைப் பார்த்து, அச்சொற்குள்ள இலக்கணங்கள் யாவும் எடுத்து விரித்துரைத்தனர். அது வன்றியும், அச்சொல்லைப் பற்றியே அநேக வினவையும் நிகழ்த்தினர். அதைக்கேட்ட வைத்தியநாத நாவலர் மிக மகிழ்ந்து, "தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்த சுவாமிநாத மூர்த்திகளா! தேவர் இவ்விடத்தில் வந்திருப்பது எனக்குத் தெரியாது" என்று மிக்க விநயமொழி கூறினர். கூறிய பின், இவ்வியல்புடைய மகாவித்துவான்களைப் போசனகாலம் முதலிய எக்காலத்தினும் சமீபத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்" என்று ஞானதேசிகரிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டார். பின்பு வைத்தியநாத நாவலர் சிலநாள் இந்நூலாசிரியருடன் ஒருங்கு வதிந்து, தொல்காப்பிய முதலிய நூல்களைப் பாராட்டிக் கொண்டிருந்தது மன்றி, இவ்விலக்கணக்கொத்து நூலையும் கேட்டு "இவ்வரிய விதிகளையெல்லாம் கண்டெடுத்து இங்ஙனம் திரட்டுவது யாவர்க்கும் அரிது அரிது" என்று மிக வியப்புற்று

மகிழ்ந்து, தமதிடத்திற்குச்சென்றனர். இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் இந்நூல் மாதவச் சிவஞானயோகிகள் இலக்கண விளக்கம் என்னும் நூலுக்கு மேனிலை விளக்கமாக எழுதிய அரிய நூலாகும். இந்நூல் எழுதிய மாதவச் சிவ ஞானயோகிகள் சிறப்பினை 1889-ல் தாமோதரம்பிள்ளை பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

அகத்தியமுனிவர் வரத்தினால் தோன்றித், தென்மொழி வடமொழிக் கடல்களின் நிலைகண்டு உணர்ந்து, முன்னும் பின்னும் தமக்கிணையின்றி வீறித், தமிழிலுள்ள நூற்களுக் கெல்லாஞ் சிரோரத்தினமாய்ச் சொலியாநிற்கும் மகாபாடி யத்தை அருளிச்செய்தபேரறிவு இமயாசலமொப்பது. எளியேன் சிற்றறிவு அதன்முன் ஒரு பூதூளிபோல்வது. அன்னோர், தப்பை ஒப்பென்று தாபிக்கவும், ஒப்பைத் தப்பென்று வாதிக் கவும் வல்லர். அஃது அவர் காஞ்சீபுரத்து வைஷ்ணவ வித்வான்கள்கொண்ட இறுமாப்பை ஒழித்தற்பொருட்டு அவர் கள் தலைமேற்கொண்ட இராமாயணத்து நாந்திச் செய்யுளை முதலிற் பங்கப்படுத்திப், பின்னர் அதனையே அவர்கள் தலை வணங்கித் தம் பிழையைப் பொறுத்தருள்கவென்று வேண்டிய பொழுது சரியென்று காட்டியதனான் விளங்கும். ஆதலால் இன்னோரன்ன பெருஞ் சிறப்பினரை எதிர்த்து இலக்கிய இலக் கணப் படைக்கலங்கள்தாங்கி அவரியற்றிய சூறாவளியை மாறா யழிக்கப் புகுந்தேன் என்று கொள்ளன்மின். அவரும் அவர் மரபினோரும் உவந்து பாராட்டிய நன்னூற்கு இவ்விலக்கண விளக்கநூல் இழிபுடையதல்ல என்ற அளவே யான் சொல்ல லாயினேன் என்க.

இலக்கணம்பற்றிப் பலகாலத்துப் பலநூல்கள் தோன்றி விளக்கம்பெற்றுள்ளன. அவைகளுள் அகத்தியம் தலை சிறந்த நூலாகும். அகத்தியமும் சிற்றகத்தியம், பேரகத்தியம் என இருவகைப்படும். அகத்தியர் இயல், இசை, நாடகம் என்ற முப்பெருந் தமிழுக்கும் இலக்கணம் வகுத்திருக்கவேண்டும். தமிழ் மக்கள்செய்த தவக்குறைவால் அப்பெருநூல் இறந்து பட்டது.

அதன் பின்னர் சென்ற இருநூறு ஆண்டுகட்கு முன் வரை இலக்கண நூல்பற்றிய ஆய்வு தொடர்ந்து இருந்து கொண்டே வந்துள்ளது. நேமிநாதம், வீரசோழியம், பிரயோக

விவேகம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், வெண்பாப்பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, அகப்பொருள் விளக்கம்போன்ற நூல்களானும், புறத்திரட்டென்ற நூல் ஒன்று இருந்ததாக வரலாறு கூறுவதாலும் இலக்கண வளர்ச்சியில் தமிழர்கள் எவ்வாறு ஈடுபட்டிருந்தார்கள் என்பதை ஒருவாறு உணரலாம்.

மேலே கூறிய இலக்கண நூல்கட்கும், தொல்காப்பியத்திற்கும் பல உரையாசிரியர்கள் உரை வகுத்திருப்பதுகொண்டும் அதன் வளர்ச்சியை அறியலாம். இத்துடன் இறையனார் களவியல் என்ற பழமையான அகப்பொருள் இலக்கணநூல் ஒன்றும் உண்டு.

ஆக உரையாசிரியர்கள் காலநிலைக்கேற்ப உரை வகுத்துள்ளமையும் உரைநடைப் போக்கினைக்கொண்டு உணர முடிகின்றது.

அம்முறையில் ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள் சாத்திர நூல்கட்கு மாபாடியங் கண்டதுபோல், இலக்கண நூல்கட்கும் விரிவாக உரைவிளக்கம் செய்துள்ளார்கள். அவ்வாறு விளக்கங்கண்ட நூல்களுள் மிக்க சிறப்பினையுடையது நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் இவைகளாம்.

இந்நூல்களுள் நன்னூல் விருத்தியுரையும், தொல்காப்பியச் சூத்திரவிருத்தியும் ஆதீன வெளியீடுகளாக முன்பே வெளிவந்துள்ளன.

கி. பி. 1864-ல் 16-வது மகாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி ஆறுமுகநாவலர் பதிப்பித்த இலக்கணவிளக்கச் சூறாவளி மிகவும் சிதைவுற்ற நிலையில் ஆதீன சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் ஒருபிரதி இருந்தது. சிதைவுற்ற இவ்வரிய நூலைச் செப்பஞ்செய்து வெளியிடுமாறு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம், 22-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கட்டளையிட்டருளியவாறு ஸ்ரீ சிவஞானசுவாமிகளது 194-வது திருநாள் விழாமலராக இந்நூல் இதுபொழுது வெளியிடப்படுகின்றது.

இவ்வரிய இலக்கணநூல் முன்னர் பதிப்பித்தபடியே வெளிவர அருளாசி வழங்கியருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது பொன்னார் திருவடிகளை வந்தித்து வழிபடுவதைத் தவிர எளியேன் வேறு என்செய்யவல்லேன்.

இங்ஙனம்,

வித்துவான்

**பொன். சுப்பிரமணிய பிள்ளை**

நூல்நிலையக் காப்பாளர்,

திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை,
3—4—78.

## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

# இலக்கணவிளக்கச்சூறாவளி

## பாயிரம்

முன்னர்ப் பாயிரத்தை வைத்து இது பாயிரமென்று உரைத்துப் பின்னர் அதுகேட்டமாணாக்கர்க்கு நூலுரைப்பான் தொடங்கினார், இப்பாயிரமுரைக்க வேண்டுவதென்னை என்னுங்கடா நிகழ்தற்கிடனுளதாய வழி, இவ்விவ்வேதுக்களான் முன்னர்ப் பாயிரமுரைக்க வேண்டுமென்றிறுத்தல் அமையும். அவ்வாறோரியையுமின்றித் "திருவிளங்கியமாநகர" முதலாக வெடுத்துரைக்குமுத்தரஞ் செப்புவழுவு மற்றொன்று விரித்தலுமாய் முடியுமென்க. இவ்வாறு தொல்லாசிரியருரையாமையுங் காண்க. 'கங்கையாடிப்போந்தே னொருபிடிசோறுதம்மின்' எனக் கடாவின்றியுஞ்செப்பு நிகழ்ந்ததாலெனின்;- கொடுப்போன்பாலேற்போன் சென்றுழி, அவன் யாண்டுவந்தாயெனக் கடாவானாயினும், கடா நிகழ்தற்கிடமுண்மையின், அதுவும் வினையபொருளை அறிவுறுத்தலேயாமென்க, அங்ஙனங்கொள்ளாக்காற் செப்பிலக்கணம் பொருந்தாமையறிக. வடநூலாரும் மேற்கோள்முன்னர்க் கூறியே பின்னர் ஏது முதலிய நான்குறுப்பும் ஒன்றன்பினொன்றியையுபடக் கூறுமாறறிக. பரிமேலழகர் உரையாளர் பாயிரமியம்புதல் கடனென்பதுபற்றி "இந்திரன் முதலிய" முதலாகச் சிறப்புப்பாயிரமே உரையாற் கூறினார். இது நிற்க.

அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றார், அவற்றியல்பு உணராமையின், அன்றியுமாசிரியர் தொல்காப்பியனார் நூலினியல்பு மரபியலுட்கூறினார். "மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்" எனவும் "ஒத்துப் படலமென்னு முறுப்பின்" எனவுங் கிளந்தெடுத்தோதுதலின்,

அஃதவயவமென்ப தவரறிந்திலர் போலும், இன்னும் "நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி" என்பதனைத் தழீஇயினுராகலின், நூலியல்பு பாயிரத்துளடங்காதென்றல் அவர்க்குங் கருத்தன்றென மறுக்க.

சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன்பெயர் முதலியவற்றிற் கெடுத்துக் காட்டினவற்றுட்சில பொருந்தாமை தொல்காப்பியப் பாயிரவிருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டுக் காண்க.

கடா - வினு. செப்பு - விடை.

பாயிரம் முற்றிற்று

---

# எழுத்ததிகாரம்

## எழுத்தியல்

எழுத்ததிகாரமென்புழி அதிகாரம் முறைமையென்றார். அதிகாரமென்னும் வடசொற்கு அது பொருளன்மை தொல்காப்பிய விருத்தியிற் கூறியவாற்றானறிக.

### க. "மலைமகளொருபால்."

மலைமகளென்பது மலையுமகளெனவும் அமங்கலப்பொருடந்து "தொகையார் பொருள் பலவாய்த் தோன்ற"லின் மலையென்பதும், பொருளதிகாரத்துள் "உமையுரு வுருமடுத்து" என்னுஞ் சூத்திரத்துள் ஏனையவற்றிற்கு மேற்குமாறு மலைமகளொருபாலென்னுஞ் சூத்திரத்திற் குரைத்தாங்குப் பொருள் விரித்துரைத்துக் கொள்க என்றமையின் ஈண்டு மலைமகளொருபான் மணந்தென்றது இந்நூனின்று நிலவுதல் வேண்டியென்றார்க்கு ஆண்டிதற்கு மறுதலையாக உமையுருவுருமடுத்தென்றது இந்நூனின்று நிலவாதிறுதல் வேண்டியெனப் பொருடருதலின் மலைமகளொருபான் மணந்தென்பதும், உறுபொருள் முதலிய வெல்லாவற்றிற்குமுரிய வேந்தனை உல்குபொருட்குரிய வேந்தனென்றல் அவனிறைமைக் கேலாதவாறுபோல ஐந்தொழிற்குமுரிய தலைவனை உலகளித்த தலைவனென்பது தலையன்மையில் தலைவனென்னும் பெயர்க்கேலாமையின் உலகளித்தவென்பதும், உலகளித்தவென்றமையால் தலைவனென்பதும், "வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்" எனவும் "முதிர்தலை வணங்கி" எனவும் "வணங்குநுண் மருங்குல்" எனவும் வணங்குதற்கு வளைவே பொருளாகக் கோடலில் தலையின் வினையாகிய இறைஞ்சுதலையே உணர்த்துமென்பதுபற்றிச் சொல் வணக்கமென்பது சொல்லாகிய வணக்கமெனப் பொருளுரையாது ஒப்புமைபற்றிக் கூறினமை தோன்றப் பரிமேலழகர் "சொல்லினது வணக்கம்" எனக் கூறினமையானும், "வணங்கிய வாயின ராத லரிது" என்பது "பணிந்த மொழியினையுடையராதல் கூடாது" என்றும் "பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி" என்றுங் கூறினமையானும், "மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே" என்புழியும் ஒப்புமைபற்றிக் கூறியதேயாமாகலானும், "தானை வணங்காத்தலை" எனவும் "அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யாதவழி" எனவுங்

கிளந்தோர் துதலானும், வணங்குதல் சிறப்புவினை யாவதல்லது பொதுவினையாகாமையின் வணங்கியென்பதும், அவ்வப்பயன் குறித்து வாராமையறிக. இவ்வாறு மேலுஞ்சொற்றொறுமுள்ள குற்றங்களைக் கூறின், விரியுமென்றொழிக.

## உ. " எண்பெயர் முறைபிறப்பு."

எண்ணுதற்கும் பெயர் கருவியாகலின், அதனை முற் கூறுதது முறையன்று. எண்ணுமுறையும்போல்வனவற்றால் ஒருபயனின்மையின், அவற்றை வகையுட்சேர்த்துக் கருவி செய்தல் பயனில் கூற்றுமாறறிக

போலியெழுத்தென வொன்றில்லையென்பது தொல் காப்பிய முதற்சூத்திரவிருத்தியுட்காண்க.

## ச. " உயிரு முடம்பும்."

சுருங்கச்சொல்லுநூற்கண் எந்தவிதியும் ஓரிடத்துக் கூறிப் பலவிடத்துணர்ந்துகொள்ளும்படி சூத்திரஞ்செய்தலே மரபு. அவ்வாறன்றி உயிரீராறு மெய்ம் மூவாறென்னுந் தொகைகளை எண்ணுச் சூத்திரத்தும் பெயர்ச்சூத்திரத்தும் வேறுவேறு கூறன் மிகையாமென்க.

## ரு. " குற்றியலிகரங் குற்றியலுகரம்."

ஆசிரியர்தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்றேயென வரையறுத்திருப்பவும், தாமவரினும் நுண்ணறிவுடையார் போன்று, நன்னூலார் கூறியசொற்பற்றிச் சிலமுதலெழுத்துக் களையும் அம்மூன்றனோடு கூட்டிச் சார்பெழுத்தெனக்கொண் டார். அது பொருந்தாமை விருத்தியில் விரித்துக் காட்டினும், ஆண்டுக்காண்க. முதலெழுத்துக்களே தம்மோடு தாஞ் சார்ந்தும் இடஞ்சார்ந்தும் பற்றுக்கோடுசார்ந்தும் வருதலாற் சார்பெழுத்தெனக் காரணக்குறியாயிற்றெனின்;—அஃதாய்தத் திற்குப் பொருந்தாமையின் அவ்வியாத்திக்குற்றமும், ஆல் கால் என்பன தம்மோடு தாஞ்சார்ந்து வருதலின் அதிவியாத் திக்குற்றமுமாமாறுகாண்க.

இடவேற்றுமையாற் குற்றியலுகர முப்பத்தாறுதல் சாலு மென்பதும் விருத்தியுட்காட்டினாம்.

## சூ. " அகரமுதல."

நன்னூலார் மொழிமுதற்கட்சுட்டுப் பொருளுணர்த்தி வரினல்லது சுட்டெழுத்தாகாவென்பார், " தனிவரிற்சுட்டு "

என்றூர். தாமுமவ்வாறுகூறுது, எவ்வாறு வரினுஞ்சுட்டெழுத் தாமென்று பொருள்பட வாளா "மொழிமுதல்வரிற்சுட்டு" என்றதுவுமன்றி, அவர் கருத்தறியாது குற்றமுங்கூறினூர்.

அ "தோற்றமளவு."

இது பொருந்தாமை விருத்தியுட்காண்க.

கூ. "உயிருழப்பு."

"படைகுடி கூழமைச்சு நட்பரணுறும்" என்புழிப்போலச் செய்யுளின்பம்படத் "தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ" எனச் சூத்திரஞ்செய்தவாசிரியர்கருத்தை நோக்காது, அதுவே முறையாகக் கொண்டார். சைவாகமங்களின் உந்தியினின் றெழுந்த நாதம் நெஞ்சின்கட்பைசந்தியாய்க் கண்டத்தின்கண் மத்திமையாய் நின்று பின்னர் வைகரியாய் வெளிப்படுமென்ற துணையல்லது இவர் கூறியமுறையாற் பிறக்குமென்னுமை யானும், பிறவாற்றுனும், அது முறையன்மையறிக.

கக. "அவற்றுண் — முயற்சியுள்."

நாவிளிம்பணுகுதற்குக் காரணமாகிய பல் அண்பல் என்றூர். பல் நாவிளிம்பணுகுதற்குக் காரணமாயின், அணுகுதற்குச் செயப்படுபொருள் யாதென்பார்க்கு விடை இன்மையறிக.

கசு. "நெடிலோடாய்தம்."

நெடிலோடாய்த முயிர்வலி மெலியிடைத்தொடர்மொழி யென்னுது "நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை தொடர் மொழி" என இவை எழுவாயாகவும் தொடரென்பதிவற்றின் பயனிலையாகவுங்கூறி, பதவுரையுள்ளுமிவ்வாறே உரைத்தார். உரைக்கவே, இவ்வைந்துந்தொடரப்படுவது உகரப்பற்றுக் கோடாகிய ஈற்றுவல்லெழுத்தொன்றுமேயன்றிச் சொன்முழு துமன்மையின், இவற்றின்மேற் பிறதொடரவும் பெறுமெனக் கூறுவிடின், இவ்வைவகை யெழுத்துமீற்றெழுத்துங் கூடியே ஒருமொழியாய் நிற்குமெனவும்பட்டு, அது இது வென்றற் றொடக்கத்தனவுங் குற்றியலுகரமாவான் செல்லுமாறறிக. ஆறன்பகுதியாகிய முப்பத்தெட்டுந் தொடர வேண்டுமென் னும் யாப்புறவின்றி ஏற்றபெற்றி தொடருமெனக்கொள்க என் றுரையாது, வன்மையெனப் பொதுப்படக் கூறுதலான், ஆற ணையுந் தொடர வேண்டுமென்னு மியாப்புற வில்லையெனத் தமக்குத் தோன்றியவாறேயுரைத்தார்.

ஏழிடங்கொண்டார்க்குப் பிண்ணுக்குச் சுண்ணும்பு என்ருற்போல்வனவும் ஆய்தந்தொடர்ந்தனவும் அடங்குமென்பதும் பிறவும் விருத்தியுட்காண்க.

### கஎ. "குறியதன்முன்னர்."

விலஃகி இலஃகு எனக் குறிலிணைக்கீழ் ஒற்றில்வழி ஒற்ருய் வருவதூஉம் ஆய்தமேயாதலானும், இன்னமுதலெழுத்தைச் சார்ந்து தோன்றுமென நியமித்தவாறு தோன்றுதலே சார்பெழுத்திற் கிலக்கணமாதலானும், ஏனையவெல்லாம் எவ்வாற்ருன் வரினுங் கூறியவிதியிற் பிறழ்ந்து வாராமையானும், ஆய்தங்குறிலிணைக்கீழ் வாராதென்றல் பொருந்தாதென மறுக்க. அஃகாமை அஃகுதல் என வல்லாறன்கீழ்ப் பிறவெழுத்துக்கள் வரினும், ஒன்பஃது ஒருபஃது எனக் குறியதன்மேற் பிறவெழுத்துக்கள் வரினும், ஆய்தங்குறில் வலிநடுவணதேயாமென்பார், "குறியதன் முன்ன ராய்தப் புள்ளி—உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே" என்ருராசிரியர் தொல்காப்பியனுருமென்க.

### கஅ. "புள்ளியில்லா."

உயிர்த்தலென்பதற்கு ஒலித்தலெனப் பொருளுரைத்தார். முன்னுருவாகியும் உருவுதிரிந்தும் உயிர்த்தல் வரிவடிவிற்கல்லது ஒலிவடிவிற்கன்மையின், ஒலித்தலென்னும் பொருளேலாமையறிக.

### கக. "இசைகெடின்."

இதற்கு விருத்தியுட்காண்க.

### உக. "தற்சுட்டளபொழி."

மூவழியும் நையுமென்றதனுன் ஐகாரமொழிக்கணன்றிக் குறுகாதென்பதுதானே பெறப்படுதலில் தன்னைச் சுட்டுதற்கட் குறுகாதென்றலும், ஐகாரமளபெடுத்தல் மேற்கூறப்பட்டமையின் தன்மாத்திரையின் மிக்கொலிக்கும் அளபெடைக்கட்குறுகுங் கொல்லோவென்னும் ஐயமின்மையின் அளபெடுத்தற்கட் குறுகாதென்றலும், பயனில் கூற்ருமென்க.

ஐகாரமொழிமுதற்கட் குறுகாமையும் ஔகாரக்குறுக்கமென ஒன்றின்மையும் விருத்தியுட்காண்க.

## உஉ. "ளளமெய் திரிந்த."

திரிதல் யாண்டுப் பெற்றுமெனின் அதுவும் அநுவாத முகத்தான்ஈண்டேபெற்றுமென்றூர். போன்ம் மருண்ம் என்பன பகுபதங்களாகலின், உரைத்தான் உயிர்த்தான் கற்பான் நிற்பான் என்பனபோல இவையும் பகுபதவுறுப்பாறனுட் சந்தி நோக்கி விகாரப்பட்டமை உணர்ந்திலர்போலும். நடந்தானென்புழி அவர்தாமே 'இயல்பினும் விதியினும்'' என்னும் புணரியற் சூத்திரவிதியான் முடித்துக் காட்டியவாறுமறிக.

## உரு. "தொல்லைவடிவின."

புள்ளியுந்தொல்லை வடிவேயாயினும் எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்குந் தனிமெய்க்கும் உயிர்மெய்க்கும் வடிவொப்புமைகண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும்பொருட்டு அவற்றிற்கு முன்னோர் பின்னர்ப் புள்ளியிட்டெழுதுக வென்றூரென்னுங் கருத்தான் "ஆண்டெய்தும்" என்றூர்க்கு, அகர ஆகாரங்கள் உகர ஊகாரங்கள் முதலியனவும் அத்தன்மையவாகலின், அவற்றிற்கும் வடிவொப்புமை கண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும்பொருட்டு அவற்றிற்கு முன்னோர் பின்னர்க் கீழ்விலங்கும் புள்ளிக்காலு முதலிய விட்டெழுதுக வென்றூரென்னுங் கருத்தான் அவை கீழ்விலங்கு முதலியன பெறுமென்றோதாமை குன்றக் கூறலாமாகலின், நன்னூலார் கூறிய "ஆண்டெய்தும்" என்றதற்கு அது கருத்தன்றென்க. அங்ஙனங் கடாயினூர்க்கு வேறிறுக்கு முறை அறியாமையில் தமக்கு வேண்டியவாறே கூறினர். மேலுமிவ்வாறே நெகிழ்ந்து போவனவற்றை ஆண்டாண்டு விரிக்கிற் பெருகும், ஆகலினின்னோரன்னவற்றை விரிக்கின்றிலம்.

## உஎ. "ஐ ஔ வலவொடு."

முதலாவனவிவை ஈறுவனவிவையென ஈண்டுக்கருவி செய்தது மேனிலைமொழியீறு வருமொழி முதலோடியையப் புணர்க்கும் பொருட்டன்றேயெனத் தாமுங்கூறினர். புணர்ச்சிக்கட் படுஞ்செய்கை எல்லாமொழிக்கும் பொதுவாகக் கூறிய தன்றித் தமிழ்மொழி மாத்திரைக்கன்றுமன்றே. அதற்கேற்ப ஈண்டு நால்வகைமொழிக்கும் பொதுவாகக் கருவிசெய்யாது தமிழ்மொழிமாத்திரைக்கே கருவிசெய்யிற் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கையுந் தமிழ்மொழிமாத்திரைக்கே விதித்தல்வேண்டும்; அவ்வாறன்றிப் பிரமகோட்டம் பிரமக்கோட்டம், வாசுதேவ கோட்டம் வாசுதேவக்கோட்டம் என்றாற்போலப் பிறவுண்டும் வடமொழி உதாரணங்களும் எடுத்துக்காட்டி, இடையுரிபோல

வடமொழிக்குஞ் செய்கையியம்பி, அவ்வியம்பிய கொளாதவற்றிற்கு "இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்" என்னுஞ் சூத்திரத்தாற் புறனடையுந் தாமுங் கூறுதலானும், "திங்களு நாளு முந்துகிளந்தன்ன" என்னுஞ் சூத்திரத்தான் ஆசிரியர் தொல்காப்பியனார் வடமொழிப் புணர்ச்சியே சிறந்தெடுத்தோதுதலானும், அதற்கேற்ப ஈண்டெல்லா மொழிப் புணர்ச்சிக்குங் கருவிசெய்யாது தமிழ்மொழிப் புணர்ச்சிமாத்திரைக்கே கருவிசெய்தல் குன்றக் கூறலென்னுங் குற்றமாமென்க. அல்லதூஉம், "தம்பொறிகளால் யவனர் தாட்படுத்த பொறியே" எனவும் "பலர்கொல் யூபநட்ட வியன்களம் பலகொல்" எனவும் "ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்" எனவும், பிறருண்டுஞ் சான்றோரெல்லாம் இவற்றை மொழிக்கு முதலாகவெடுத்து நிலைமொழி வருமொழியாகப்புணர்த்து இவ்வாறு மொழிக்கு முதலாகாத ஆரியச் சொற்களை அரத்தம் இரதி உலோபமென மொழிக்குமுதலா மெழுத்துக்களோடு கூட்டிக்கூறுதலின், அதற்கேற்ப இவ்வெழுத்துக்கண் மொழிக்கு முதலாம் இவ்வெழுத்துக்கண் மொழிக்கு முதலாகாவென எல்லாமொழிக்கும் பொதுப்பட வரைந்தோதாவிடின், ஆரியச் சொற்கள் ரத்தம் ரதியென்றாற்போல வேண்டியவாறே மொழிக்கு முதலாக வெடுத்து நிலைமொழி வருமொழியாகப் புணர்க்கப்பட்டு வழுவாமென்னுங் கருத்தானும், நன்னூலார் எல்லாமொழிக்கும் பொதுவாக மொழிக்கு முதலாமெழுத்துக்களிவை ஆகாவெழுத்துக்களிவையென வரைந்து கருவி செய்தார். இவர் இவ்வியல்புணராமையில் தமக்கு வேண்டியவாறே கூறினர். "அஇஉஎஒ வெனுமூன்றலங்கடை" என்பது முதலாக இவ்வெழுத்துக்களை மொழிக்கு முதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியனார் விலக்கினமையின், இவ்வடமொழிகளுந் திசைச்சொற்களும் அக்காலத்திவ்வாறு தமிழின்கட் பயின்றுவாராமை பெறுதும்.

ஙனமென்னும் பலபொருளொருசொல் தனித்து வருதலின்றி யரழக்களின்வழிச் சார்ந்து வருமாகலின், அக்கருத்தானே ஆசிரியர் தொல்காப்பியனார் "முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" என்றார். அவ்வழக்கிக்காலத்து வீழ்ந்தமையின், இக்காலத்துப் புதியன புணர்த்தலான் வழங்குதற்கேற்ப, நன்னூலார் "சுட்டியா வெகர வினாவழி" என்றார், இவரக்கருத்தறியாது தோன்றியவாறே குற்றங் கூறினர். அங்ஙனம் இங்ஙனமெனச் சார்ந்துவருவனவற்றிற்கு அங்கு இங்கு எனவுறுப்பாய் வருவனவற்றை எடுத்துக்காட்டி மறுத்தல் பொருந்தாமையறிக.

உஅ. "ஆவி ஞணநமன."

குற்றுகரத்தைப் புணர்ச்சி வேறுபாட்டான் வேறெடுத்தோதினதாகக் கூறினர். அல்லுழியுயிரேயாமென்னுங் கருத்துப்போலும். அஃதாசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாயிற் குற்றியலுகரப்புணரியலை உயிர்மயங்கியலைச் சாரவைப்பர். அங்ஙனம் வையாது புள்ளிமயங்கியலின் பின்னர் வைத்தது இம்மயக்கம் வராமைப் பொருட்டென்றே கொள்க. முதலெழுத்திற்குப் புணர்ச்சிகூறிப் பின்னர்ச்சார்பெழுத்திற்குப் புணர்ச்சிகூறவேண்டுதலின், அம்முறைபற்றிக் குற்றியலுகரப் புணரியலை உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியலின் பின்னர் வைத்தாரென முறைகூறவறியாது, நச்சினார்க்கினியார் மெய்யுயிரென்றவற்றுள் உயிரினது விகாரமாய்நின்ற குற்றியலுகரத்தை இருவழிக்கண்ணும் புணர்க்கின்றமையிற் புள்ளிமயங்கியலோடியைபுடைத்தாயிற் றென்றார். உயிரினது விகாரமாயின் உயிர்மயங்கியலைச் சாரவையாது புள்ளிமயங்கியலைச் சாரவைத்தன் முறையன்மையின், அது பொருந்தாதென்க. ஆய்தத்தை ஒருநிமித்தம்பற்றி ஒற்றின்பாற்படுப்பினும் பதினெட்டொற்றுளடங்காதவாறுபோலக் குற்றியலிகரக் குற்றியலுகரங்களை ஒருநிமித்தம்பற்றி உயிரின்பாற்படுப்பினும் பன்னிரண்டுயிருள்ளுமடங்காது வேறேயாமெனக் கொள்க.

உகூ. "குற்றுயிரளபு."

ஈண்டுதாரணங்களுட்சிறிது பொருந்தாமையுய்த்துணர்க. எழுத்து வேற்றுமையல்லது இடவேற்றுமைபற்றி எண்ணலாகாதென மேலோதியவர் ஈண்டுமவ்வாறே உயிரீறு பன்னிரண்டெனவெழுத்து வேற்றுமைபற்றியெண்ணமறந்து, இடவேற்றுமைபற்றியே எண்ணி, உயிரீறு நூற்றறுபத்துமூன்றென மயங்கிக்கூறினர். முதலுக்குமிஃதொக்கும்.

௩௦. "னகரவிறுதி."

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த—னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப" எனவாசிரியர் தொல்காப்பியனர் வரைந்தோதியிருப்ப, இவர் இத்தொடக்கத்தனவெனப் பின்னுஞ் சிலவுளவாக அவரோடு மாறுகொளக் கூறினர். நிலன் நிலம் என்றற்றொடக்கத்துக் குறிலிணையொற்றாய் நிற்குஞ் சொற்களின் னகரம் மகரத்தோடு மயங்கிநிற்கு மாற்றலுடைமையின், அவ்வாற்றலுடையவற்றுள் மயங்காதுநிற்குஞ்

சொற்களே எடுத்தோதி விலக்கல்வேண்டும். அவ்வாற்ற வில்லாத கடான் வயான் என்றாற்போலுங் குறினெடிலொற் றுக்களை எடுத்தோதி விலக்கல்வேண்டிய தெற்றுக்கென்க. யாண்டுங்குறிலிணையொற்றல்லுழி வரும் ணகரமும் மூவெழுத்தி னிறந்த தொடர்மொழி ணகரமும் மகரத்தோடு மயங்காமை கண்டுகொள்க. ஆசிரியர் தொடர்மொழி யென்றாராயினும், தொடர்மொழியுண் முந்தியதாகிய மூவெழுத்துத்தொடர் மொழியென்பதே கருத்தாகக் கொள்க. அவற்றுள்ளுங் குறி லிணையொற்றாகிய மொழியென்பது ஏற்புழிக் கோடலாற் கோடும்.

## ௩க. " கசதபவொழித்த. "

மெய்யொடு மெய்யியைதற்கே சையோகமென்னுங்குறி வட நூலார் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் ' அம்மூவாறும் வழங்கியன் மருங்கின் — மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை' என மெய்யொடு மெய்யியைதற்கே மயக்கமென்னுங் குறியீடு கூறினர். அக்கருத்தேபற்றி நன்னூலாரும் "இவ்விருபான் மயக்கு மொழியிடை மேவும்" எனச்சூத்திரப்பொருளை முடித்து, உயிருமெய்யு மயங்கு மயக்கத்துக்கு வரையறையின்மையின் அவையிக்குறியீடு பெறுவென்பர் 'உயிர்மெய்மயக்களவின்றே' என ஒழிந்தார், ஒன்றேடொன்றியைதல் ஒப்புமைபற்றி "ரழத்தனிக் குறிலணையா" என்பதனை இதனைச் சாரவைத்தார். அதனைது மயக்கமென்னுங் குறியீடு பெருமையறிக, அக் கருத்தறியாது அவற்றிற்கு மயக்கமென்னுங் குறியீடு கொண் டாராயினும், முதலிறுதிகளை ஒற்றுமை நயம்பற்றி உயிர் மெய்ம் முதல் உயிர்மெய் ஈறெனவோதாது வேற்றுமை நயம்பற்றி மெய்ம் முதல் உயிரீறெனவோதியவாறே, ஈண்டும் கருவி துணங்கை என்பவற்றை உயிர் மயக்கமெனக் கோடல்வேண்டும், அதனை மறந்து உயிர்மெய் மயக்கமென்றல் பொருந்தாமையறிக.

## ௩௫. " தம்மரபிசைப்பின். "

முதலாமெனவே, ஈறுதலுந்தானே பெறப்படும். முதலீறு இடைநிலையென வேண்டாகூறினர், இவ்விதிக்கும் பயன் கூறு தார்க்கு இச்சூத்திரம் பயனில்கூற்றாய் முடியுமென்க.

## ௩சூ. " அம்முனிகரம். "

போலியெழுத்தென வேறில்லையென்பது விருத்தியுட் காண்கவென மேலுரைத்தாம், கடைப்பிடிக்க.

௩௭. " நெட்டுயிர்காரமும். "

ஒற்றுக்கள் சாரியை பெறுவென்பது விருத்தியுட்காண்க.

எழுத்தியன் முற்றிற்று.

---

## பதவியல்

### க. " எழுத்தே தனித்தும். "

நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதனூல் வடநூலாகலின், அது தோன்ற மொழியியலென்னுது பதவியலென வடசொல்லான் அதற்குப் பெயரிட்டு, அவ்வோத்துள் வடவெழுத்துத் தமிழில் வருமாறுங்கூறினர். இவர் தமிழ்மொழி மாத்திரைக்கே இலக்கணங் கூறுதுமெனப் புகுந்தமையாற் பதவியலென வடமொழியாற் குறியிடுதல் பழுதாமென்க,

எழுத்துத் தனித்து நிற்றலானும் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றலானுமன்றே தனிமொழி தொடர்மொழியெனப் பெயர்பெற்றன. அங்ஙனமாகலின் ஈரெழுத்திணைந்ததனையுந் தொடர்மொழி யென்னுக்கால். அவை தொடர்ந்தனவுமல்லவாய்ப் பொருளை விளக்குதலு மில்லையாமாகலின், ஈரெழுத் தொருமொழியுந் தொடர்மொழி யென்றலே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங் கருத்து, ஆயினும், "தொடரலிறுதி" எனவும் "சொல்லிய தொடர்மொழியிறுதி" எனவும் "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த—னகரத் தொடர்மொழி" எனவும் "நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றும்" எனவும் ஈரெழுத்துத் தொடர்மொழிக்கும் இரண்டனையிறந்திசைக்குந் தொடர்மொழிக்கும் முடிவு வேறுபாடு கண்டு முன்னர்ச் செய்கை செய்வதற்கேற்ப, ஈண்டு "ஈரெழுத்தொருமொழியெனவுந் தொடர்மொழியெனவும் பெயரிட்டுக் கருவி செய்தார். இதுவே ஆசிரியர் கருத்தாதல் "தொடர்மொழி" யென வாளாகூருது "இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி" என அடைகொடுத்தோதியதே இரண்டனையிறவா திணைந்திசைக்குந் தொடர்மொழியு முண்டெனப் பொருள்கொள்ளக் கிடத்தலானறிக. நன்னூலார்கொண்ட நயத்திற்கு அவ்வாறு கருவிசெய்ய வேண்டாமையின், இணைந்திசைக்குந் தொடர்மொழியை வேறுகூருது தொடர்மொழியென ஒன்ருகக்கூறினர். இவரக்கருத்தறியாது தமக்கு வேண்டியவாறே உரைத்தார்.

இன்னுமிவ்வியன் முழுதினும் இவர் கூறியவற்றுட் குற்றங்களை விரிக்கப்புகின், விளையாட்டு மகளிரட்ட மணற்சோற்றிற் கல்லாராயப் புகுதலோடொக்குமென்றொழிக அவையெல்லாம் விருத்தியுட் கூறியதுபற்றி உய்த்துணர்ந்துகொள்க.

சொல்லியல்பு சிறிது முணராமையால் தமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினர். பிரயோக விவேக நூலாருஞ் சொல்லியல்புணராமையான், எல்லாச்சொல்லு முரிச்சொல்லாமெனவும், குறிப்பு வினைமுற்றும் பெயர்பகுபதமுமொன்றெனவும், மயங்கிக் கூறி, குறிப்பு வினைமுற்றே தத்திதாந்தமெனவுங் கூறினர். தத்திதன் பிராதிபதிகமெனப் பெயர்பெற்று ஐம்முதலிய வுருபேற்றுச் சுபந்தமென நிற்குமென அவர்தாமே கூறினமையும் இவ்விலக்கணம் வினைக்குறிப்புக் கேலாமையுமறிக.

கச. "இலக்கியங்கண்டதற்கிலக்கணம்."

கச்சினன் நாட்டினன் என்புழி வரும் இன் சுவண்டுச் சாரியையன்று, உறங்கினனென்புழிப்போல இடைநிற்றலானிடைநிலையாமென்றார். அதனை மறந்து, பதமுன் விகுதியும் என்னுஞ் சூத்திரத்துள் உண்டது ஊரது என்றாற்போல்வன சாரியை வரவேண்டியே நின்றனவென்றார். இங்ஙனம் முன்னொடு பின் மயங்கக்கூறுதல் அவரியல்பென்க.

பதவியன் முற்றிற்று.

---

## உயிரீற்றுப்புணரியல்

க. "மெய்யுயிர்முதல்."

உயிரீற்றுப் புணரியலென்பதற்குப் "பதமுன் விகுதியும் பதமுமுருபும் புணர்வுழி" என்றவாறே உயிரீற்றுப் பதமுன் வருமொழி நாற்கணமும் வந்து புணருமியல்பென ஏழாம் வேற்றுமைச் சந்திப் பொருள்படக் கூறாது, உயிரீற்றுப்பத நின்று வருமொழி நாற்கணத்தோடு புணருமியல்பெனப் பொருளுரைத்தார். அங்ஙனமெழுவாய்ச் சந்திப்பொருள்பட நிற்பின், உயிரீறுபுணரியலென இயல்பாய் முடிவதல்லது உயிரீற்றுப் புணரியலெனச் செய்கைப்பட்டு முடியாமையான், அது பொருளன்மையறிக. மெய்யீற்றுப் புணரியலென்பதற்கும் இஃதொக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் "நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்" எனக்கொண்ட குறியீடுமறிந்திலர் போலும்.

## உ. "ஐம்முதலாறும்."

ஆசிரியர் தொல்காப்பியனுர் வினைத்தொகைகள் பண்புத் தொகைகள் இருமொழிப் புணர்ச்சியாயினும் பிரிவிலொட்டுக் களாய் நிற்றலிற் "புணரிய னிலையிடை யுணரத் தோன்ரு" எனவும், பகுபதமொருமொழியாய் நிற்றலிற் புணர்ச்சியெய்தா தெனவுமொழிந்தார். தொகுத்துச்செய்யு நூலாகலின், அது பாயிரத்துள் "புலந்தொகுத்தோன்" என்றதனுனறிக. இவரந் நயம்பற்றி யோதாது, நன்னூலார்கூறிய நயம்பற்றி "ஆறினு முன்னிப் புணர்த்து முடித்தனர் கொளலே." எ-ம். "பதமுன் விகுதியும் புணர்வுழி." எ-ம், கூறி, ஒருமொழி நீர்மைத்தாகிய பகுபதத்தினை நிலைமொழி வருமொழியாகப் பகுதி விகுதி முதலியவற்றை வேறு நிறீஇப் புணர்ச்சிக்குக் கூறிய செய்கையாற் செய்கை செய்து புணர்த்து முடித்தவர் இருமொழிப் புணர்ச்சியாகிய வினைத்தொகை பண்புத்தொகைகளை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படா வென்றதும் அவற்றிற்குச் செய்கை கூருதொழிதலுங் குற்றமாதலறிக.

பொற்ருெடி, பவளவாய், திரிதாடி, வெள்ளாடை, தகர ஞாழலென்னும் வேற்றுமைத்தொகை முதலிய ஐந்தொகையும் தத்தம் பொருள்படத் தொகாது அன்மொழிப் பொருள்படத் தொக்கவழிப்பின்னரவை வேற்றுமைத்தொகைமுதலிய தொகை யாகாமையின், அவ்வேறுபாடுபற்றி அன்மொழித்தொகை வேறுகூறிய நன்னூலார் கருத்தறியாது, அன்மொழிப்பொருள் படத் தொக்கவிரு மொழியையும் நிலைமொழியாயே நிறுத்தி வேறு வருமொழியோடு புணர்த்திக்காட்டிக் குற்றங்கூறல் பொருந்தாமையறிக. அவ்வாறு புணர்த்தலே சந்தியாயிற் புலிப்பாய்த்துள் புலிவிற்கெண்டை முதலியவற்றையும் வேறு வருமொழியோடு புணர்த்துதாரணங் காட்டல்வேண்டும். வேண்டவே. அவையு மல்வழிச் சந்திக்கேலாமையுணர்க. பொற்ருெடியென்பது தொடியை யுணர்த்தியவழி வேற்றுமைச் சந்தியாம், அணிந்தாளை உணர்த்தியவழி அல்வழிச் சந்தியா மெனத் தெரிந்துகொள்க.

## ந. "வேற்றுமைவழிய."

இச்சூத்திரத்திற் கிதுபொருளன்மை விருத்தியுட்காண்க.

## ரு. "வலித்தன்மெலித்தனீட்டல்,"

வலித்தன் முதலிய நான்கு விகாரமும்படுதல் சொல்லின் கண்ணதாகிய வெழுத்திற்கெனவும், விரித்தருெகுத்தலென்னு

மிரண்டு விகாரமும்படுதல் சொன்முழுதிற்கு மெனவெங்கூறினர். "தண்ணந் துறைவர் தகவிலர்" என்புழி அம்முச்சாரியை யாய்த்தான் அசைநிலையாய்த்தான் அழகென்னும் பொருட் டாய்த் தானிற்குமாகலானும், சொல் யாண்டும் பொருட்பய னின்றி வாராமையானும். சொல்விரிதலாமாறு இயாண்டைய தென்க. அன்றியும் "சீர்நிலை திரியாது தடுமாறும்மே" என வெழுத்துவிரியும் விகாரம் வேறியாண்டடங்குமென்றொழிக. இன்னுமினமல்லாத சொல்விகாரத்தை யெழுத்து விகாரத்தோ டுடனெண்ணல் பொருந்தாமையுமறிக. இவ்வைய நீக்குதற் கன்றே ஆசிரியர் தொல்காப்பியனார் அறுவகை விகாரத்துள் விரிக்கும்வழி விரித்தலையுந் தொகுக்கும்வழித் தொகுத்தலையும் நடுவண்வைத் தெண்ணரியதூஉமென்க.

### சா. "ஒருமொழிமூவழி."

ஒருமொழியானது ஒரு தொடரின் முதலிடை கடை யென்னு மூன்றிடத்துங்குறுகலும் வேண்டுழி வருமென்றலே இச்சூத்திரப் பொருளென்பது தெரிந்துகொள்க. "குறைச் சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்" என்பதுமிது.

### எ. "அன்னுனின்னல்."

தொடையலென்புழி அல் விகுதியென்றொழிக. அற்றுச் சாரியை பொருணிலைக்குதவிசெய்யுஞ் சிறப்புத்தோன்ற "நல் லற்று" என்ற நன்னூலார் கருத்தறியாது, அல்லுச் சாரியை யெனக்கொண்டார்.

### அ. "அத்தினகரம்."

ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய சாரியைச்சூத்திரம் பல்காமைப்பொருட்டுத் தமக்கேற்றவாறு வேறுபடுத்துவார்க்கு அத்துச்சாரியையேயன்றித் துச்சாரியையுமொன்று வகுத்து இச்சூத்திரமோதாதொழிதலே பொருத்தமுடைத்தென்க.

### கூ. "பதமுன்விகுதியும்,"

நன்னூலார்போல "வருதலுந் த்விர்தலும் விகற்பமு மாகும்" எனத்தொகுத்துக்கூறிப் புறனடையுமீண்டே கூறினர். ஆசிரியர் தொல்காப்பியனார் போல மேற்பதங்கட்குத் தனித் தனி சாரியைப் பேறு விதிக்கப் புகுந்தார்க்கு ஈண்டேயிவ்வாறு கூறல் பொருந்தாமையறிக.

### கஉ, " புள்ளியீற்றுமுன்,"

"ஞண நமல வளன வொற்றிறு தொழிற்பெயர்" என்றற்றொடக்கத்து மெய்யீற்றுப்புணர்ச்சிக்கேயுரிய விதியையீண்டுக் கூறுதல் உயிரீற்றுப்புணரிய லென்னும் பெயர்க் கேலாமை தெரிந்துகொள்க.

### கநு. " குற்றியலுகரத்திறுதி."

இது பொருந்தாமையும் பிறவும் விருத்தியுட்காண்க.

### ககூ. " பொதுப்பெயருயர்திணை."

நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரியவெழுத்துக்கள் திரியாதியல்பாதலும் வருமொழிச்செய்கையாய் மிகுதற்குரிய வெழுத்துக்கண் மிகாதியல்பாதலுங் கருதியன்றே, 'ஈற்றுமெய் யியல்பாம்' என்றும், 'வன்மை மிகா' என்றும் பகுத்தோதினர். அவ்வாறே யரழக்கண் மூன்றும் உயிர்போல வருமொழிச்செய்கையாய் வன்மைமிகுதற்குரியனவன்றி ஏனைமெய்போல நிலைமொழிச்செய்கையாய்த் திரிதற்குரியனவன்மையின், அவற்றுள் ழகரம் பொதுப்பெயர் திணைப்பெயர்கட்கீறுகாமையின், ஈறுவனவான ஏனை இரண்டனையுமுயிரோடு சேர்த்து வருமொழிச் செய்கை யியல்பாமென்னாது, ஏனைமெய்களோடொப்ப வைத்தியல்பாமென்றல் பொருந்தாமையறிக. அக்கருத்துக் கொள்ளாக்கால், ஈற்றுமெய்முன்மிகா எனவும் அவற்றீற்றுயிரியல்பா மெனவுமாறிக்கூறினும் பொருந்து மெனப்பட்டு, வழுவாமாறறிக.

### உஉ. " ஔவென வரூஉம்."

இச்சூத்திரத்திற்கூறிய வெழுத்துக்களை ஈறுகவுடைய சொற்கள் முன்னிலைவினைக்கின்மையான் அதன்கணையமின்மையின், முன்னிலைவினையை விலக்குதல்வேண்டாம், இவ்வீற்றுத் தொழிற்பெயருண்மையின் அதனை விலக்குதல்வேண்டுமாயின், சொல்லென்பது ஏவல் வினையெனவே யமையும். அவ்வாறு கூறுது ஒருமொழியே ஓசை வேறுபாட்டாற் பிறிது பொருளையு முணர்த்துமென மயங்கி, ஏற்புழிக்கோடலான் ஈண்டேவல் வினைமேற்றாயிற்றெனப் பழுதுபடக்கூறினர்.

### ௩ச, " மெல்லெழுத்துமிகுவழி."

புணர்ச்சிக்கண் உயிர்மிகவருஞ் செய்கைக்கு இவரியாண்டுஞ் சூத்திரங்கூறுமையின் 'உயிர்மிக வருவழி உயிர்கெட வருத

லும்' என்றலும், ஏனையவற்றிற்கும் இவ்வீறு மெல்லெழுத்து மிகும் இவ்வீறு வல்லெழுத்து மிகும் இவ்விறு இயற்கையாம் இவ்வீறு சாரியை பெறுமென ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறியவாறே இவர் தனித்தனி வகுத்துக் கூருமையின் 'இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்' என நன்னூலார் கூறியவாறே பொதுப்படக் கூருது ஆசிரியர் கூறியவாறே வகுத்துக் கூறுதலும், பொருந்தாமையறிக.

"எக்கண்டு பெயருங் காலே" "நப்புணர் வில்லா நயனில்லோர்" என நெடுமுதல் குறுகும் விரவுப்பெயர்கள் இன மெல்லெழுத்தாய்த் திரிதற்குரிய மகரந்திரியாதுகெட்டு வல்லெழுத்துப் பெற்றனவெனத் தாங்கூறிய செய்கைக்கேற்பக் கூற மறந்து, மெல்லெழுத்துப்பெறுதற்குரியன வல்லெழுத்துப் பெற்றனவென ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறியவாறே அவ் வுரைவாசகத்தை எடுத்தெழுதினர்.

## உகூ. "எகரவினுமுச்சுட்டின்."

இதனுட்சொன்முடிபு பொருந்தாமை தெரிந்துகொள்க.

## ௩க. "இயல்பினும் விதியினும்."

பிறிதென்னு நயம்பற்றிக் கூறிலமென்ருர்க்கு "இயல்பினும் விதியினும்" எனப் பகுத்துக்கூறல் பொருந்தாமையறிக.

புலிபோலக் கொண்டான் என்புழிப் போலவென்பது உணக்கொண்டான் என்புழிப்போலக் காலம் விளக்கி நிற்றலில் தெரிநிலை வினையாவதல்லது குறிப்பு வினையாகாதென மறுக்க.

கண்டெனக் கொண்டானென்புழி எனவென்பது செய்து செய்யூமுதலியவற்று ஈறுபோல வினையெச்ச விகுதியேயென மறுக்க.

அதிர்ப்புக்கடிதென்பதனுள் அதிர்ப்பென்பதனைக் குற்றியலுகரவீற்று உரிச்சொலென்ருர், உரிச்சொலிலக்கண மறியாமையின். அதிரென்னுமுரிச்சொற் புகரவிகுதிபெற்றுத் தொழிற் பெயராய் நிற்குமாறறிக.

## ௩ரு. "செய்யியவென்னும்."

உருபுயிரீண்டடங்காதென "மூன்ற னுருபினுமாற னுருபினும்" என்று வேறு சூத்திரஞ் செய்வார்க்கு ஈண்டாறனுருபு வேருதல் பொருந்தாமையுணர்க.

சொற்பல்கச் சூத்திரஞ்செய்தற் கஞ்சாதார்க்கு ஈண்டை விதிகளை நன்னூலார்போலச் சாலவுஞ் சொற்சுருங்கச் சூத்திரித்தும், "அன்றுவரு காலை யாவாகுதலு—மைவரு காலை மெய் வரைந்து கெடுதலுஞ்-செய்யுண் மருங்கி னுரித்தெனமொழிப." "மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலு—மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்-மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கு—மைகார வேற்றுமைத் திரிபென மொழிப" என்றாற் போலுஞ் சிலவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார்போலச் சாலவுஞ் சொற்பல்கச் சூத்திரித்தும், ஒருவழிப்பட நில்லாராயினர். இன்னுஞ் சிலவிதிகளை நன்னூலார் நயம்பற்றிப் புடைநூலோடொப்பக் கூறிச் சிலவிதிகளை ஆசிரியர் தொல்காப்பியனார் நயம்பற்றி வழிநூலோடொப்பக் கூறினார். ஒரு நயம்பற்றி ஒருவழிப்பட்டு நின்றுகூறுது. இவ்வாறு பலவழிப்படச் செய்தார், நூல்செய்யுந் திறனறியாமையானென்க. ஏனையவுமிவ்வாறே ஆண்டாண்டுக் கண்டுகொள்க, ஈண்டு விரிப்பிற் பெருகும்.

உயிரீற்றுப்புணரியன் முற்றிற்று.

---

## உருபுபுணரியல்

### கக. "இதற்கிதுமுடிபு."

எண் பெயர் முதலிய புறப்புறக் கருவியென்றார். எண்ணுமுறையும் பிறப்பு முருவுமளவுஞ் செய்கைக்குக் கருவியாகாமையின், அவை பயனிலவாய் முடியும், இவர் கூறிய முறைநோக்குவார்க்கெனவறிக. பதவியல் புறக்கருவியென்றார்க்கு "எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும்—பதமாம் பொருடரின்" என்பதொழித்து ஏனையவெல்லாம் வெற்றெனத்தொடுத்தலாய் முடியுமாறறிக. "மெய்யுயிர் முதலீ ரூமிரு பதங்களும்" என்றற்றொடக்கத்தனவற்றை அகக்கருவியென்னது அகப்புறக் கருவியெனவும் "எகர ஒகரம் பெயர்க்கீ ருகா" என்றார்போலும் புறப்புறக்கருவியை அகக்கருவியெனவுங் கூறினார், இச் செய்கை செய்தற்கு இது சிறந்தகருவி இது சிறவாக்கருவி யென்னு முண்மையறியமாட்டாமையின்.

இனிச்செய்கையை நான்காக வகுத்துக் கூறியதூஉம் பொருந்தாமையோர்ந்துணர்க.

உருபுபுணரியன் முற்றிற்று.

எழுத்ததிகாரமுடிந்தது.

---

# சொல்லதிகாரம்

## பெயரியல்

### க. "உமையவளொடு."

இவ்வதிகாரம் மேற்பாயிரத்துளெழுத்து முதன்மூன்றையு மென நிறுத்தமுறையானே எழுத்துணர்த்திச் சொல்லுணர்த்து கின்றாராகலிற் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தென்றார். பாயிரஞ்செய்தார் சதாசிவநாவலரென்றன்றே ஆண்டுரைத் தார். சதாசிவநாவலர் நிறுத்த முறைபற்றி வைத்தியநாத நாவலர் நூல்செய்தாரென்றல் பொருந்தாமையறிக. பாயிரம் நூல்செய்த பின்னர்ச்செயப்படுவதாகலின், அது "பொருள் விரித்துரைத்தனன்" என்றிறந்தகாலவாய் பட்டாற் கூறியத னுமுணர்க.

### ச. "உயர்திணை யென்மனர்."

மக்கட்சுட்டென்பது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையெனவும், மக்களென்றதாகுபெய ரான் மக்கட்சுட்டை உணர்த்தி நின்றதெனவுங் கூறினர். மக்க ளென்ற தாகுபெயரான் மக்கட்சுட்டை உணர்த்திற்றேல், "பாணன் பறையன் துடியன் கடம்பனென்—றந்நான் கல்லது குடியுமில்லை" என்புழிப்போல ஆண்டஃதஃறிணைச் சொல்லா தல்வேண்டும்: வேண்டவே, அஃதலபிறவேயென அஃறிணைச் சுட்டாற் கூறுது "அவரலபிறவே" என்றல் திணைவழுவாய் முடியுமாகலின், அஃதாசிரியர் கருத்தன்றென்க. இன்னோரன் னவையெல்லாந் தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுள் விளங்கக் கூறினும். ஆண்டுக்காண்க.

உயர்திணையென்பது இறந்தகாலவினைத்தொகையென் றார். உயர்ச்சி முக்காலத்துமொத்தியல்வதறியார்போலும்.

திணையென்பதொழுக்கமென்றார். அஃறிணையுளுயிரில் லனவற்றிற்கு ஒழுக்கமின்மையின், அது பொருளன்று. இவை யுயர்சாதி இவையிழிசாதியென உலகத்துப்பொருளையெல்லாம் இருவகைச்சாதியாகப் பகுத்துக்கூறுதலே ஆசிரியர் கருத்தாக லானும், திணையென்னும் பலபொருளொருசொல் ஈண்டுச் சாதியுணர்த்தி நின்றதெனக்கொள்க.

## சு. "ஒன்றேபல."

ஆண்பால் பெண்பாலென்னும் வழக்கு உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கின்றென்றார். "ஆண்பாலெல்லா மாணெனற்குரிய" பெண்பாலெல்லாம் பெண்ணெனற்குரிய" என்னும் மரபியற்சூத்திரங்களையும், ஆண்மைசுட்டியபெயர் பெண்மைசுட்டியபெயரென்னுங் குறியீடுகளையும், களிறு பிடி முதலிய வழக்குக்களையும் மறந்தார்போலும்.

## எ. "தெய்வமும் பேடுமாம்."

ஆணவாய்ப் பெண்ணிழந்ததற்கும் பெண்ணவாயாணிழந்ததற்கும் முறையே பேடன்வந்தான் பேடிவந்தாளெனவுதாரணங்காட்டி, அலி அவற்றின்வேறெனக் கூறினார். அது பொருந்தாது, பெண்ணவாயாணிழந்ததனைப் பேடியெனவும் ஆணவாய்ப் பெண்ணிழந்ததனை அலியெனவுங் கூறுதலே மரபாகலின். அது பேடன் வந்தான் பேடன்மாரென உரையாசிரியரையுள்ளிட்டோர் காட்டாமையானும், அலிவந்தாளெனத் தாமுங்காட்டாமையானும், "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" எ-ம். "பேடிகை வாளாண்மை" எ-ம். "இன்பா லடிசிற் கிவர்கின்ற கைப்பேடி." எ-ம். சான்றோரெல்லாம் பெண்ணவாயாணிழந்ததனையே பேடெனக் கூறுதலானுமறிக. அற்றேல், ஏனையாண்பால் பெண்பால்போலப்புணர்ச்சி முதலாயவற்றிற்குரியவாய் முகவுரோமம் முலைமுதலியவுறுப்புக்களையுடையவாய்த் தன்மை திரிந்தன ஆண்பேடு பெண்பேடெனவும், இத்தன்மையில்லதலியெனவுங் கூறினாகாதோவெனின்:- ஆகாது, "வேயே திரண்மென்றோள் வில்லே கொடும்புருவம் - வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி - நோயே முலைசுமப்ப தென்றூர்க் கருகிருந்தா - ரேயே யிவ ளொருத்தி பேடியோவென்று - ரெரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ வென்றார்." "பலிகொண்டு பேராத பாச மிவள்கண் - ணொலிகொண் டுயிருண்ணுங் கூற்ற மென் றெல்லே - கலி கொண்டு தேவர் முலைகரந்து வைத்தா - ரிலைகொண்ட பூணினீ ரென்றெழினி சேர்ந்தா - ளிலங்குபொற் கிங்கிணியா ணக் கெழினி சேர்ந்தாள்." என்பவற்றூற் பேடியை முலையுறுப்பில்லாதவளெனவும், அதனுலொலிகொண்டுயிருண்ணுந் தன்மையில்லாளெனவும், விளங்கக் கூறுதலின். அன்றியுந் தன்மை திரிபெயர்க்கு அலிவந்ததெனவே தாமுமுதாரணங் காட்டினாராகலின் தமக்குமிதுவே கருத்துப்போலுமென்க.

### கo. "இலக்கணமுடையது."

குழூஉக்குறியையும் வழக்குநெறியெனவுடனெண்ணினர். குழுவின் வந்த குறுநிலவழக்குச் சான்றோர்வழக்கின்கண்ணும் அவர் செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படாவெனச் சேனாவரையர் மறுத்தமையான். அது வழக்குநெறியாகாமை யறிக.

### கஉ. "ஆகுபெயர்வினைக்குறிப்பு."

"அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு" என்பதாகு பெயருளடங்குதலின், வேறோதல் பொருந்தாது. "குன்று விளையு ளுயர்நிலந் துன்புற்றுத் - தாவென் றிரப்பாடன் கை." என்றாற்போல எழுத்துக்களை யெடுத்துக்கொண்டன சொல் லன்மையான் ஆகுபெயராதற்கேலாமையின், வேறோதலமையு மென்க.

### கச. "செந்தமிழாகி."

வடவேங்கடந் தென்குமரியென இரண்டெல்லைக்குட் பட்டன வெல்லாந் தமிழ்நாடாகவும், அவற்றுளொருநிலத் தைப் பிரித்துச் செந்தமிழ்நிலமென்றற்குக் காரணமறியாமை யின், அதற்கெல்லை முன்னுரைசெய்தார் கூறியதேபற்றித் தாமு முரைத்தார். ஒருவர்சென்றவழியே சேறலுலகியல்பாகலின் முக் குணவயத்தான்முறைதிறம்பல் உயிர்வருக்கத்துக்கெல்லாம் பொதுவாதலறிக. கருவூரின்கிழக்கெல்லாம் புனனாடேயாம். புனனாடெனினுஞ் சோணாடெனினுமொக்கும். புனனாடென்றாற் போலப் பொதுப்படக் கூறாது தென்பாண்டியென ஏகதேசத் தைப் பிரித்தோதியதுமறிக.

### கரு. "ஒருபொருள்குறித்த."

அருமையானன்றி யியல்பாற்பொருளுணருஞ் சொல்லை இயற்சொல்லெனவும் அதனின் வேறுயரிதுணர் பொருளன வாகிய சொல்லைத் திரிசொல்லெனவுங்கூறிய உண்மை நோக் காது, யான், யாம், நீ, நீர் என்பன என், எம் நின், நும் எனத் திரிந்தாற்போல மலையென்னுஞ்சொல்லே விலங்கல் அடுக்கலென்றற் றொடக்கத்தனவாய்த் திரிதலில் திரிசொல்லெ னப்படுமெனவும், அது திரியுங்காற் கிளியென்பது கிள்ளை யென உறுப்புத்திரிந்தும் தத்தையென முழுவதுந்திரிந்தும் வருமெனவுங்கூறினர். மலையென்பதே விலங்கல் அடுக்கலென் றற்றொடக்கத்தனவாய்த் திரியுமெனின், அவையெல்லாமொரு

சொல்லெனல்வேண்டும். அவ்வாறன்றி "ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்" எனவும் ஆவி உடம்பு உறுப்பு ஒற்று உடல் புள்ளியென்றற் றொடக்கத்தனவற்றைப் பரியாயநாமங் களெனவும், அவர்தாமே கூறுதலான், அவர்க்கது கருத்தன் றென மறுக்க. அப்பரியாயநாமங்களெல்லாம் பெரும்பான் மையும் ஒவ்வொரு காரணம்பற்றி வருதலின், வேறுசொல்லே யாமென்பது.

### கசு. "செந்தமிழ்நிலஞ்சேர்."

தமிழொழி பதினேழ்நிலத்து மொழிகளையுங்கொடுந் தமிழ் நாட்டு மொழியோடொப்பத் திசைச்சொல்லெனக் கொண்டார். ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு கொள்ளாமையானும், உரையாசிரியர் சேனவரையர் கூறுமையானும், வடசொற் போல வேனை நிலத்துச் சொற்கள் சான்றோர்வழக்கினுள்ளுஞ் செய்யுளினும் வாராமையானும், சிலசொற்கள் இக்காலத்து வரினும் இலக்கணமுறையன்மையானும், அவை தமிழ்க்குரிய திசைச்சொல்லாகாவென மறுக்க.

### கஎ. "பொதுவெழுத்தானும்."

வடமொழியிலக்கண மறியாதார் ஈண்டுக் கூறியவற் றுட் பொருந்துவனவும் பொருந்தாதனவுமுள அவையோர்ந் துணர்க. இவ்வெழுத்திவ்வெழுத்தாய்த் திரிந்து வருமென வரையறுத்தோதப் புகின் அவ்வரையறையிற் பிறழ்ந்தும் வரு தலின் இங்ஙனமோதிலமென்றார். புணர்ச்சி முதலிய ஏனை விதிகளுங் கூறிய வரையறையிற் பிறழ்ந்தும் வருதலினன்றே புறனடை முதலியவற்றுனமைத்தார். அவற்றையுமிக்கருத்தே பற்றியோதாதொழியமறந்தார்போலும். இங்ஙனங்கூறுவார்க்கு நூல்செய்துமெனத் தொடங்குதலுங் கூடாதென்க.

### உக. "கிளந்தகிளைமுதல்."

"வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்" என்றாற் போல்வனவற்றுட் கள்ளென்விகுதி யிசைநிறைத்து நின்றதே யாமென்றார். விகுதியுமிடைச்சொல்லென்னுஞ் சொல்லாகலின் ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்னும் விதி பற்றிச் சிறப்பின்கண் வந்தமையறியார்போலும்.

### உச. "பால்பகாவஃறிணை."

அஃறிணையியற்பெயர் பால்வரையறைப்படாது நிற்பது சொல்லியல்பென்னாது, கள்ளொடு சிவணுமையாலென்றார்.

உழத்திகள் மறத்திகளென்றாற்போலுமுயர்திணைப் பெயருங்கள்ளொடு சிவணுவழிப் பால்வரையறைப் படாது நிற்றல் வேண்டும்; அங்ஙனமின்மையின், அதுசொல்லியல்பாமென்க.

### உரு. "முதற்பெயர்நான்கும்."

கோதையென்பது சாத்தன், சாத்தி, மருதி, செவியிலி என்றார்போல ஈற்றால் பால் விளக்குதலின்றிப் பொதுவாய் நிற்றலிற் பன்மை சுட்டியபெயராமென்க.

### உஅ. "பன்மைசுட்டிய வெல்லாப்பெயரும்."

பன்மைசுட்டியபெயரென்றது பலபாலையுஞ்சுட்டிநிற்றலிற் பிறிதினியைபு நீக்கிய விசேடணமடுத்து நின்றதென உரையாசிரியர் கூறியவாறே கூறாது, இயைபின்மை நீக்கிய விசேடணமடுத்து ஆதீண்டுகுற்றியென்றார்போலத் தலைமை பற்றியவழக்காய் நின்றதெனவும் பன்மைசுட்டுதற்குத் தலைமையாண்மை சுட்டியபெயர் முதன்மூன்றனும் ஒருகாற்சுட்டப்படும் ஒன்றுமொருவரும் போலாது இப்பெயரானே சுட்டப்படுமுரிமையுடைமையாற் கொள்கவெனவுங்கூறினர். ஆண்மை சுட்டியபெயர் முதலிய மூன்றனையும் பிறிதினியைபு நீக்கியவிசேடணமடுத்து நின்ற பெயரெனக்கொண்டு, அவற்றோடுடனெண்ணியவிதனை அவ்வாறு கொள்ளாது, இயைபின்மை நீக்கிய விசேடணமடுத்து நின்றதெனக் கோடல்பொருந்தாமையானும், ஆண்மைசுட்டிய பெயர் முதலிய மூன்றும்போலாது பன்மைசுட்டிய பெயர்க்குப் பன்மைசுட்டுதற்கண் விசேடவுரிமையுண்டாயிற் பன்மைசுட்டியபெயர் உயர்திணைப்பன்மை சுட்டாமையும் ஒருமைசுட்டுதலும் வழுவாமாகலானும், இஃதமைதிச்சூத்திரமன்மையானும், அதுபோலியுரையென்க. பலபாலையுஞ் சுட்டிநிற்றலிற் பன்மைசுட்டிய பெயரெனின், ஆண்மை சுட்டிய பெயர்முதலியனவும் பலபால்களையுஞ் சுட்டிநிற்றலின் அவற்றையும் பன்மைசுட்டியபெயரெனல் வேண்டுமாலெனின் —அது பொருந்தாது, நான்குபாலுஞ் சுட்டிநிற்குந் தன்னை நோக்க ஏனை மூன்றுபாலும் இரண்டுபாலுஞ் சுட்டிநிற்கும் பெயர்கள் சின்மைசுட்டிய பெயரெனப் படுவனவல்லது பன்மைசுட்டிய பெயரெனப்படாவாகலானென்க. அற்றேல் அவற்றைச் சின்மைசுட்டிய பெயரெனவேயமையும் பிறவெனின்,— அவற்றுள் ஆண்மைசுட்டுதன் முதலிய பகுப்புண்மையின் அவற்றைப் பகுத்துக்கூறல் வேண்டுதலான், அமையாதென்க. இக்கருத்தேபற்றியன்றே பஃறொடை வெண்பா வென்றாற்போல ஏனையவற்றையும் பஃறொடைவெண்பாவெனக்கூறாததூஉம்

உம், பகுப்புண்மையிற் சிஃறொடை வெண்பா வென்றொழியா ததூஉம். பஃறாழிசைக் கொச்சகமென்றதனை நோக்கி அதனிற் குறைந்ததனைப் பகுப்பின்மையாற் சிஃறாழிசைக் கொச்சக மென்றே போந்ததூஉமென்க. இனியிவ்வாறன்றி, ஆணொருமை பெண்ணொருமை அஃறிணையொருமையென்ற மூன்றும் ஒருமைப்பாலெனவொன்றாயடங்குதலிற் பலபால்களையுஞ் சுட்டி நின்றனவல்லவாகலான், அம்மூன்றொருமையுஞ் சுட்டிய பெயர்களை ஒருமைசுட்டிய பெயரெனவும், இஃதொருமையும் பன்மையுமென்னு மிருபாலுஞ் சுட்டிநிற்றலாற் பன்மை சுட்டிய பெயரெனவுங் கொள்ளினுமிழுக்காது. இனி ஒருமை சுட்டிய பெயர்மூன்றும் இருதிணையினும் பன்மைசுட்டாது ஒருமையே சுட்டியவாறுபோலப் பன்மைசுட்டிய பெயரும் இருதிணைக்கண்ணும் பன்மை சுட்டுவதல்லது ஒருமைசுட்டுதல் பொருந்தாதெனக்கொண்டு, கள்ளென்விகுதி இருதிணைப் பன்மைக்கும், பொதுவாய் நிற்றலின் இருதிணையொருமைக்கும் பொதுவாய்நிற்கு முதற்பெயர் முதலிய மூன்றனோடு அவ்விகுதியைத் தலைப்பெய்து, அவற்றைப் பன்மைசுட்டிய பெயர்க்குதாரணமாகக்கொள்ளிற் படுமிழுக் கென்னையெனின்;—தாய் தந்தை முதலிய முறைப்பெயரும் கள்விகுதியோடுகூடி மூன்றெனப்படுதலான் முறைப்பெயரிரண்டா மென்பதனோடு முரணுதலானும், இயற்பெயராய் நிற்பவற்றிற்கன்றி விகுதியொடு வரும்பெயரை ஈண்டு விதிக்கப்புகாமையானும், தொல்காப்பியத்தோடு முரணுதலானும், அது பொருந்ாதெனமறுக்க.

## உகூ. "தன்மையானுன்."

"பேய்பூத மந்தி கிளிபூவை பேசுதலா—னுருமே தன்மை பொது" என்பதேபற்றித் தன்மையை விரவுத்திணையெனச் சாதித்து, ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் அறியாமையேற்றினார். பேய்பூதந் தெய்வச்சாதியாதலால் "தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக்கிளவி" என்பதனுளடங்குமாதலானும், மந்தி பேசுதல் யாண்டுமின்மையின் "ஈங்குநீ யெம்மை நோக்கி" என்றாற்போல்வன புனைந்துரை வகையாற் கூறியதன்றி உண்மைபற்றிக் கூறியதன்றாகலானும், கிளிபூவை கூறியவாறு கூறுதலல்லது இச்சொல்லை இவ்வாறு கூறவேண்டுமெனச் சொல்லுண்மையறிந்து கூறுதலுலகத்தின்மையால் "பூவையுங் கிளியுங் கேட்டு', என்றாற்போல்வனவும் புனைந்துரைவகையாற் கூறியதேயாமாகலானும், தன்மை விரவுத் திணையாகா தென மறுக்க, மரமுதலியன பேசுவனவாகச் சான்றோர்செய்யுட்கண் வருதலின் அவை புனைந்துரையெனவேபடுமாகலான்.

இவையுமுன்னவேயாமென்க. இனி மந்தி முதலிய உண்மை யானும் பேசினவேயாமெனினும், எறும்புகள் பேசினவற்றை ஒரு வேந்தன் கேட்டு நகைத்துத் தன்மனைவிக்குக் கூறித் தலையிழந் தானெனப் புராணங்கள் கூறுதலின், எறும்புகள் பேசுதல் பெற்றும்; அவைபேசுதல் குறிப்பாலுணர்த்துதலன்றி மொழி யாற்பேசுதலன்றென்பது எல்லார்க்குமொப்ப முடிந்தது; முடி யவே அஃறிணைப்பெயர்களெல்லாம் இவ்வாறென்றற்கொன்று குறிப்பாலுணர்த்துமென்பது பெறப்பட்டதாகலின், மந்தி முதலிய பேசுதலும் அவ்வியல்பிற்றேயாமென்க. இங்ஙனமன்றா யின், உயர்திணை அஃறிணையென்னும் பகுப்பேலாமையறிக. ஒரோவழி அஃறிணைப்பொருள்கள் மொழியாற்பேசுவனவுள வாயின், அது தெய்வத்தன்மை முதலிய விசேடத்தானன்றிப் பொருட்டன்மையானன்மையின், அமைத்துக் கொள்வதன்றி அதுபற்றி விரவுத்திணையென்றல் சிறிதும் பொருந்தாதென்க. அற்றாதலினன்றே ஆசிரியர் தன்மையை உயர்திணையெனவே கூறியதூஉமென்க. இது கொள்ளாதார்க்குச் "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்—செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கி யும்" என்பதனைத் தழுவுதலும் "கேட்குநபோலவுங் கிளக்குந போலவு—மஃறிணை மருங்கினு மறையப் படுமே" என வழு வமைத்தலும் வேண்டாவென்க.

### ௩௩, "ஒருவரென்பது."

காளை விடலையென்பன பொதுப்பெயரென்றார். சிறப்புப் பெயராக "நம்பியாடூஉ விடலை" எனச் சூத்திரித்ததை மறந் தார்போலும். இங்ஙனம் முன்னொடுபின் மயங்கிக் கூறுதலவ ரியல்பென்க. எருத்தைக் காளை விடலையென அடிப்பட்ட சான் றோரான் வழங்கப்படாமையுமுணர்க.

### ௩௪, "பொருண்முதல்."

எண்ணுப்பெயர் ஆகுபெயர் ஆகாதென்றல் பொருந் தாமை விருத்தியுட்காண்க.

இவ்வதிகாரம் எழுத்து இவ்வதிகாரஞ்சொல் இவ்வதிகா ரம் பொருளென்றாற்போல்வன எழுத்துச் சொற்பொருளென் னுஞ்சொற்களான் அவற்றிற்கிலக்கணங் கூறியவதிகாரங்களைக் கூறினவென இவற்றைச் சொல்லாகுபெயருக்குதாரணமாகக் காட்டினார். கடுத்தின்றான், புளித்தின்றானென்றற்றொடக்கத் தனவுங் கடு புளியென்றற்றொடக்கத்துச் சொற்களாற் காய் முதலிய பொருள்களைக் கூறலான், அவற்றையுஞ் சொல்லாகு பெயரெனல் வேண்டும். அவ்வாறு வேண்டாமையான்,

இவ்வையுஞ் சொல்லாகுபெயராகாவென மறுக்க. எழுத்துச் சொற்பொருளென்னுந்தானிகளான் அவ்விலக்கணங்களைக் கூறுதற்குத் தானமாகிய படலங்களைக் கூறினமையான், இவை தானியாகுபெயரேயாமென்க. இனித் திருவாசகம் திருவாய் மொழியெனச் சொல்லையே யுணர்த்திநிற்கும் பெயர்களான் அச்சொல்லாலாக்கப்படும் நூலைக் கூறினமையின், இவற்றைச் சொல்லாகு பெயரென்னுமோவெனின்; - என்னும். என்னை? சொற்கு எழுத்து முதற்காரணமாயினாற்போலச் செய்யுட்கு முதற்காரணமாய் நிற்குமொழியின்பெயரான் அச்செய்யுட்களை உணர்த்துதலான் அவை காரணவாகுபெயரெனப்படுமாகலா னென்க. இனித் திருவாசகம் திருவாய்மொழி யென்பன உண்மையானோக்குவார்க்கு அன்மொழித் தொகையாவன வன்றி ஆகுபெயராகாமையுணர்க. "திரைத்த விருது குறள் சிந் தளவடி தேம்பழுத்து" எனவொரு செய்யுட்கு முதனிற் குஞ்சொற்களான் அவ்வவ செய்யுட்களைக் கூறினமையின். இவையே சொல்லாகுபெயராமென்க. இது சினையாகுபெயரு ளடங்குமேனும், விளங்குதற்பொருட்டு வேறு கூறினர்; அளவையாகுபெயர் குணவாகுபெயருளடங்குமேனும் அதனை வேறு கூறினாற்போலக் கொள்க.

அகத்தியம், தொல்காப்பியம், கபிலமென்பன ஆகுபெய ரல்லவாதல் விருத்தியுட் காண்க.

ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேற்றுமை விருத்தியுள் விளங்கக் கூறினும், ஆண்டுக்காண்க. ஈண்டாகு பெயரும் அன்மொழித்தொகையு மொன்றென்றவர் குறிப்பிற் றன்மொழி யிவையென்புழி ஆகுபெயரெனவே அன்மொழித் தொகையு மடங்குமென்றொழியாது "ஆகுபெயர் வினைக்குறிப் பன்மொழி விகாரம்" என வேறு கூறலான். அவ்விரண்டு மொன்றேயென்றல் அவர்க்குங் கருத்தன்மையுணர்க. பரிமே லழகியார் கனங் குழைஎன்றதனை ஆகுபெயரென்றாராலெனின்;- அவர் "பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின்" என்ப தற்குப் பொச்சாவாமனமென அந்தக்கரணத்தைக் கருவியாகக் கூறினர். அதனை மறுத்துப்பொச்சாவாமையாகிய கருவியெனத் தாமும் பெயரெச்சச் சூத்திரத்துளுரைத்தாராகலின், அவர் கூறியனவெல்லா முடன்பாடென்பது தமக்குங் கருத்தன் றென்க.

மக்கட்சுட்டு மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொரு ளென்றக்கால் நன்கு மதிக்கப்படும் பொருளுமக்களேயாகலின் மக்களாகிய மக்களென வருவதல்லது இன்னதிதுவென வாரா

மையின், மக்கட்சுட்டேயிருபெயரொட்டாகாதென்றார். உலகத்துப் பொருளையெல்லாம் உயர்திணைப்பொருள் அஃறிணைப் பொருளென விரண்டாகப் பகுத்துக்கொண்டதற்கேற்ப, மக்களென்பது பொருளென்னும் பொதுமையினீக்கி உயர்திணைப் பொருளை விசேடித்து நிற்பச் சுட்டென்பதாகுபெயராய் அப் பொருளினுயர்ச்சி தோன்றச் சிறப்பித்து நிற்ப, இன்னதிது வென ஓன்றனையொன்று விசேடித்து இருபெயருமொட்டி வருதலான், இருபெயரொட்டாகாமை யாண்டையதென மறுக்க.

## ௩௫. "ஏற்குமெவ்வகை."

செயப்படுபொருண் முதலியவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்தி நிற்றலின் எழுவாயும் வேற்றுமை யாயிற்றென்றார். அவ்வாறு கூறுவார்க்கு விகாரத்தினின்றும் வேறுபடுதலின் இயல்பும் விகாரமேயாமெனல் வேண்டுமென்க.

## ௩௭. "ஆறனுருபு."

எழுவாயாய் நின்றவுருபே ஆறு வேற்றுமைகளினுருபு மேற்குமென்னுங்கருத்தான் "ஆற னுருபு மேற்குமவ் வுருபே" எனக்கூறிய நன்னூலார் கருத்தறியாது, ஆறும்வேற்றுமை யுருபு பிறவுருபுகளை யேற்குமெனக் கொண்டார். அதுபொருந்தாமை விருத்தியுட் கூறினும், ஆண்டுக்காண்க.

## ௪௧. "இரண்டாவதனுருபு."

குழையையுடையனென்றவழிக் குழையும் உடையனெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையிற் செயப்படுபொருளேயாமென்றார், செயப்படுபொருளுண்மை யுணராமையின். குழையையுடையன் சாத்தனென்றவழி உடையனென்னும் விகுதியானுணர்த்தப்படுங் கருத்தாவின்றொழிலையுற்று நிற்பினன்றே செயப்படுபொருளாம். அவ்வாறன்றி உடையனெனக் கருதுவானொருவன்றொழிலையுற்றுநிற்பது செயப்படுபொருளெனக் கொள்ளின்:— எயிலையிழைத்தானென்பதும் இழைத்தானெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையின், அதனையுமவ்வாற்றாற் செயப்படுபொருளெனல்வேண்டும். அன்றியுங் குழையையுடையனென்புழி, உடையானுமுடையனெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையின், அவனையுமாண்டுச் செயப்படுபொருளெனக் கோடல்வேண்டும், ஆகலினது போலியுரையென்க.

## சஉ. "மூன்றாவதனுருபு."

வினைமுதற்குங் கருவிக்கும் இவர் கூறிய இலக்கணம், செயப்படுபொருள் குன்றியவினை நிகழ்வுழிச் செல்லாமையின், வழுவாதலறிக. ஆசிரியர் பாணினியார் "சுதந்திரன்கருத்தா." எ-ம். "சாதகதமங்கரணம்." எ-ம். ஓதினார். ஒருதொழினிகழ்ச்சிக் கட்டன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருள்கருத்தா. எ-ம். ஒருதொழில் பயத்தற்கண் உயர்ந்த காரகங்கருவி. எ-ம். அவற்றிற்கு நிருத்தி கூறுவார். இங்ஙனங்கூறியவாற்றாற் கருவிகருத்தாமுதலியவற்றிற்கும் கருவிகருத்தாமுதலியவாதற்றன்மை பொருந்துமாறறிக. ஏனையவுமிவ்வாறுள்ளனவோர்ந்துணர்க.

## சச. "ஐந்தாவதற்குருபு."

"நீங்கலொப் பெல்லை யேதுப் பொருள்" எனவே இதனினிற்றிதுவென்னும் பொருள் விளங்குதலின், அதுகூறுதன்மிகையாம். அன்றி அதுகூறவேண்டுவார்க்கு "நீங்கலொப் பெல்லை யேதுப் பொருள்வயின்" என்றன் மிகையாம். இரண்டுங்கூறுதலே மரபென்பார்க்கு ஏனையவற்றிற்கும் 'இதனைச் செய்வ திதுவென லதன்பொருள்' 'இதனாற் செய்வ திதுவென லதன்பொருள்' என்றாற்போலச் சூத்திரஞ்செய்யாமை குன்றக்கூறலாய் முடியுமெனவுணர்க. மேலுமிவ்வாறே காண்க.

## சரு. "ஆறன்."

சொல்லின்றிரிபே பொருளென அபேதங்கூறுவார் மதம்பற்றித் தொகையதுவிரி பொருளது கேடு என்பவற்றோடு சொல்லது பொருளென்பதனையுஞ் சிறிது திரிந்ததற்குதாரணமாகக் காட்டினார். மேற்சொல்லாவ திருதிணையைம்பாற் பொருளாயு மொருவனுணர்தற்குக் கருவியாமோசையெனப் பேதமாகக்கூறியதை மறந்தார்போலும்.

## சசா. "ஏழனுருபு."

கண் கால் முதலியன உருபாகவென்றார், அவையோரிடத்தினை வரைந்துணர்த்துங்காற் பொருளாதலும் ஐம்முதலியனபோலச் சாத்தனுழையிருந்தான் சாத்தன்முன்வந்தான் எனத்தனக்கெனவோர் பொருளின்றிப் பெயர்ப்பொருளையிடமாக வேறுபடுத்துங்கால் உருபாதலுமாகிய வேறுபாடு உணராமையின்.

### சசு. "இம்முப்பெயர்க்கண்."

பால் காட்டுமீறின்றேனும், பொருள்வகையான் ஆண்பால் பெண்பாலென்பன அஃறிணைக்குமுண்மையின், அவை இருதிணைக்கும் பொதுவாய்ச் சொற்றன்மையான் அஃறிணைப் பெயராய் நிற்கும். அவற்றை ஆண்பால் கூறுய் பெண்பால் கூறுய் என லகரவீற்றுயர்திணைப் பெயர்க்குதாரணங்காட்டல் பொருந்தாமையறிக. அவை இருதிணைக்கும் பொதுவாதல் "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய" "பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய." என்னுமரபியற் சூத்திரங்களானு முணர்க.

### ருக. "ஒருசார்னவ்வீற்று."

ஏடாவென்பது தோழன் முன்னிலைப்பெயராயே நிற்ப தொன்றுயின் ஆண்டுருபேற்றற் கிடமாகாமையின், வேற்றுமைக்கிடனுய்" எனச் சிறந்தெடுத்தோதிய பெயரிலக்கணம் வழுவாய் முடியுமென்க. தோழன் முன்னிலைப் பெயரென்றமையான், அஃதிடைச் சொல்லன்மையுமுணர்க. ஆயின் ஏடாவென்பது தோழன்முன்னிலைப் பெயரென்ற தென்னையெனின் வழக்கு மிகுதிபற்றி அவ்வாறு கூறியதென்க. "நோனுமை பொருமை யாமென நுவல்வர்" என்றுரேனும், நோற்றலென்னு முடம்பாட்டுச்சொல் விலக்கப்படாமை போலக் கொள்க.

### ருஅ. "தநநு."

"இ உ ஊவொடு" என்னுஞ் சூத்திரத்தான் விளியேற்குமெனக் கூறிப்போந்த ஈற்றுள் ஒன்றல்லாத மகரவீற்றுத் தாமென்னும் விரவுப்பெயரையும் ஈண்டெடுத்து விலக்கினர். அவருக்கு மயக்கமுமறவியும் இயல்பென்றற்கிதுவே சான்றுதலறிக.

### கூஅ. "வினையேசெய்வது,"

குழையானென்றவழிக் கருதுதற்றொழிலுங் கருதுதற் கருத்தாவுங் கருதப்பட்ட குழையும் பிறவும்பற்றி அக்கருத்து நிகழ்ந்ததென்ருர். அது பொருந்தாமை மேலே கூறினும். வினைக்குறிப்பினுண்மை யறியாமையின், இவ்வாறு தமக்கு வேண்டியவாறே கூறினர்.

பெயரியன் முற்றிற்று.

# வினையியல்

## ௩. "அவைதாம்."

முற்றிற்கு மெச்சத்திற்குந் தமக்கு வேண்டியவாறே இடர்ப்பட்டிலக்கணங் கூறினர். அவாய் நிலை யில்வழியும் "ஆர்த்தார் கொண்மார் வந்தார்" "காண்கும் வந்தேம்" என்பன பிறிதோர்சொற் பற்றியல்லது நிற்றலாற்றாமையின், அவையெச்சமாவான் சேறலான், அஃதிலக்கண வழுவாத லறிக.

## ௧௩. "கயவொடு ரவ்வொற்று."

"பாடின் மன்னரைப் பாடன்மா ரெவரே" "நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே" என மாரீறு பல்லோர்படர்க்கை யொன்றற்கேயுரித்தாய் வருதலின், அதனைத் திணைபாலிட மெல்லாஞ் செல்லும் வியங்கோளீறெனக் கோடல் சிறிதும் பொருந்தாமை யறிக. ஏனையவுமிவ்வாறு வருவனவோர்ந் துணர்க.

## ௧௪. "வேறின்மையுண்டு."

"கருகுமுண்டு" என்புழி உண்டெனக் குறிப்புணர்த்தி நிற்குஞ்சொல்லும் 'ஆவுண்டு' என உண்மையுணர்த்தி நிற்குஞ்சொல்லும் ஒன்றென மயங்கிக் கூறினர். அவை தம்முள் வேறுதல் விருத்தியுட்காண்க.

## ௧௭. "அவற்றுட்செய்த."

ஆறுசென்றவியர் உண்டவெச்சில் என்றாற்போல்வன செயப்படு பொருட்கணடங்குமென்றார். "மற்றிந்நோய் தீரு மருந்தருளாய்" என்புழிக் கருவிக்கணடங்குமென்ற மருந்து மருந்தானோய் தீர்ந்தது எனக் கருவிப் பொருண்மைக்குரிய மூன்றனுருபேற்று நிற்குமாறுபோல, வியர்முதலிய செயப்படு பொருண்மைக் குரிய இரண்டனுருபேற்று நில்லாமையிற் செயப்படுபொருட்கண் அடங்குமாறி யாண்டையதென்க.

## ௨௨. "சினைவினைமுதலொடு."

முதலினுஞ் சினையினும் பிறவினைமுதலொடு முடியுமாயின், "சினை வினைமுதலொடும்" எனவமைக்கவும், "முதலினுங் வினை முதல் கொள்ளும்" என விதந்தோதவும் வேண்டா. அங்ஙனம் வேண்டலாற் பிறவினை பிறவினைமுதலொடு முடியுமென்றல் அவர்க்குங் கருத்தன்றுபோலுமென மறுக்க. "உரற்கால் யானை யொடித்துண்டஞ்சிய யா" என்றாற் போல்வனவற்றிற்குப்

பொருள்கோளறியாமையின், அவ்வாறு கூறினர். இன்னோ ரன்னவையெல்லாம் விருத்தியுட்காண்க. செய்தெனெச்சம் பிற வினையுங் கொள்ளுமென்பார்க்குத் தலைவன் பிரிந்து வருந் தினன் என்றாற்போல்வனவற்றையுஞ் செய்தெனெச்சம் பிற வினை கொண்டனவென்னாது செயவெனெச்சத் திரிபென்ற லெற்றிற்கென்க. காரணகாரியப் பொருட்டா யிறந்தகால முணர்த்துவனவெல்லாஞ் செயவெனெச்சத் திரிபாமெனின் கையற்றுவீழ்ந்தான் கண்ணொந்துகிடந்தான் என்றற்றொடக் கத்தனவற்றையுங் காரண காரியப்பொருட்டாய் இறந்தகால முணர்த்துதல்பற்றிச் செயவெனெச்சத் திரிபென்றல்வேண் டும். அங்ஙன்ங்கூறாது, அவற்றைச் செய்தெனெச்சமென்றே கொண்டார். இவ்வாறு மயங்கக் கூறுதல் அவரியல்பென்க. 'ஆகிடந்து செறுவிளைந்தது' 'பூணணிந்து விளங்கிய புகழ் சான் மார்ப' 'உண்டு பசிகெட்டது' என்றாற்போல்வனவுங் காரணகாரியப் பொருளவாய்ப் பிறவினைகோடலின், இவை யுஞ்செயவெனெச்சத் திரிபென்றே கொள்க.

## உச. "வினைமுற்றேவினை."

"காணான் கழிதலு முண்டென் றொருநாள்" என்புழி எச்சமுற்றாய்த் திரிந்ததென்னாது முற்றெச்சமாய்த் திரிந்ததென் றார்க்குத் தலைவன் பிரிந்து வருந்தினளென்புழியும் அவ்வாறு சொல்வடிவுபற்றிப் பிரிந்தென்னுஞ் செய்தெனெச்சஞ் செயவெ னெச்சமாய்த் திரிந்ததெனல்வேண்டும், அதனை மறந்தார்போ லும். அன்றியும், செயவென்னுமெச்சஞ் செய்தெனெச்சமாய்த் திரிந்த வழியுந் தன்பொருளையே தந்து நின்றாற்போல, முற் றெச்சமாய்த்திரிந்த வழியும் முற்றுப்பொருளே தரல்வேண்டும், அங்ஙனந்தாராமையின், முற்றேயெச்சமாய்த் திரிதல் யாண் டையதென்க, எச்சமே முற்றாய்த் திரிந்ததாயின், இருதிணை யைம்பான் மூவிடத்திற்கும் பொதுவாய் நில்லாது முற்றுச் சொற் கோதிய வீற்றவாய் இருதிணையைம்பான் மூவிடமு முணர்த்துமா றென்னையெனின்; - அற்றாதலினன்றே திரிந்த தெனப்பட்டதென்க. கண்ணியன் வில்லினன் எனவரும் வினைக்குறிப்பு முற்றாதற்கேற்பதோ ரெச்சமின்றாலெனின்; — நன்றுசொன்னாய். வினைக்குறிப்பு முற்றெச்சமாய்த் திரியு மென்றாரை அங்ஙனமெச்சமாய்த் திரிந்த வாய்பாடி யாதெனக் கடாயினர்க்கு விடை யாதோவென்க.

வினையியன் முற்றிற்று.

# இடைச்சொல்லியல்

## சூ. "எதிர்மறைசிறப்பெண்."

சாத்தன் வருதற்குமுரியனென்பது வாராமைக்குமுரிய னென்றெஞ்சிநிற்ப எச்சவும்மைக்குரிய விலக்கணமுழுவது மேற்றுநிற்றலின், அஃதெச்சவும்மையாவதல்லது எதிர்மறை யும்மையாகாதெனமறுக்க. "மறப்பினுமோத்துக்கொளலாகும்" என்புழி மறப்பினு மென்னு மும்மை மறக்கலாகாதென்னுமெதிர் மறைப்பொருடந்து நிற்றலின், இன்னோரன்னவையே எதிர் மறையும்மையாமென்பது. "ஒன்றுரைப்பான்போலிளிவந்துஞ் சொல்லும்" என்பதன்கண் வருவனவற்றையையவும்மை யென்றார். 'திருமகளுமல்லளரமகளும்ல்லளிவள்' என்பதனோடு 'மதுகையுமுடையன் அடக்கமுமுடையன் வன்மையுமுடையன் ஒருவன்' என்பதன்கண் வேற்றுமையின்மையானும், மதுகை யுடையவனே அடக்கமுடையவனே வன்மையுடையவனேவென ஐயப்பொருடாராமையானும், "அன்று ஞெருவன்றனுண்ட கைமை விட்டென்னைச் சொல்லுஞ்சொற் கேட்டிசுடரிழாய்" எனத் தோழி தலைவன் தன்மைகளை யெடுத்துக்காட்டி அத் தன்மைகளை யுடையானொருவன் சொல்லுஞ்சொல்லைக் கேட் பாயாகவெனத் தலைவிக்கறிவுறுக்கின்றாளல்லது ஐயுற்றுக்கூறு கின்றாளல்லளாகலானும், அது பொருந்தாதென மறுக்க. அவன்வெல்லினும் வெல்லுமென்பது துணியாமைக்கண் வரு தலின், இன்னோரன்னவையே ஐயவும்மையாம். பத்தானுமெட் டானுமெனக் காட்டு வாருமுளர். திருமகளுமல்லளரமகளுமல்ல ளென்பதும் எச்சவும்மையென மறுக்க. நெடியனும் வலியனு மாயினானென்பது எண்ணும்மையென மறுக்க. இதுவே சேனு வரையர்க்குங்கருத்தாதல் அவருரையானுணர்க. முற்றும்மை யெச்சப்படுவதெதிர்மறைவினைக்கணன்றி விதிவினைக்கணின் றென மறுக்க. அவர் பெயரெச்சச்சூத்திரத்துள் "அறுபொருட் பெயரொடு முடியு முறையது" என்புழி முற்றும்மையை யெச்ச மாக்கிப் பிறபொருட் பெயரொடு முடியுமெனக் கொள்கவென் றார். ஆண்டிதனை மறந்தார்போலும். ஏனையவுமோர்ந்துணர்க.

இடைச்சொல்லியன் முற்றிற்று.

## உரிச்சொல்லியல்

### கக. " அன்னபிறவும். "

" எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்'' என வென்றுற்றரப்பட்ட பாதுகாவலாணையாலென்றுர். இவ்விலக் கணவிளக்க நூலுள் எச்சொலாயினும் பொருள்வேறு கிளத்த லென இவராற்றரப்பட்டவாணை யாண்டையதென்க. தாஞ் செய்த நூன்முறைபற்றியுரைசெய்யாது தொல்காப்பியத்திற் கிடந்தவாறே படியெடுத்தெழுதித் தமதறியாமையை விளக்கினு ரெனவறிக, ஏனையவுமோர்ந்துணர்க.

உரிச்சொல்லியன் முற்றிற்று.

---

## பொதுவியல்

### க. " திணையேபாலிடம். "

நால்வகையோத்தினுள்ளுங் கூறுதற்கிடனின்றியெஞ்சி நின்ற நால்வகைச்சொல்லிலக்கணங்களை முன்னர்வைத்து வழுக்களைந்து சொற்களையமைத்துக்கோடலை அவற்றின்பின் னுகை வைப்பினன்றே, நால்வகையோத்திேைடு இவ்வோத்திற் கியைபுடைமை விளங்கும். அங்ஙனம் வையாமன் மாறி வைத் தமையான், முதலோத்துக்களோடியையாமையுணர்க.

### உ. " திணைமயக்குற்ற. "

துணிந்தவழி அன்மைச்சொல் அன்மைத்தன்மையை மறுக்கப்படும் பொருண்மேலும் மறுக்கப்படுமுகத்தாற்சுட்டி நிற்குமென்றுர். குற்றிகொல்லோ மகன்கொல்லோவென்றை யுற்றதூஉம் பின்னர் மகனெனத் துணிந்ததூஉந் தன்முன் னுகக் காணப்படும் பொருளை யாமன்றே, அங்ஙனமாகவே வேறுபொருளன்றுந்தன்மையை அப்பொருண்மேற்சுட்டிக் கூறுவானல்லது வேறுபொருண்மேற்சுட்டிக் கூறுதற்கோரியை பின்மையின், அது பொருந்தாதென மறுக்க. அல்லதூஉங் குற்றியன்று மகனென்றவழி மகனென்பது இவனென்னுந் தோன்றுவெழுவாய்க்குப் பயனிலையாய் நின்று முடியினுங் குற்றியன்றென்பதனேடியையாமையின், குற்றியன்று மக னென்ப தொருதொடரன்றும். அன்றுகவே. குற்றியன்றென் பது துணிதற் பயன்பற்றி வந்ததன்றுய் முடிந்தது. முடியவே,

குற்றியன்று மகனென்றதனல் வேறுபயனின்மையின், அது வழுவாமென மறுக்க. ஏனையுதாரணங்களுமிவ்வாறே காண்க.

## ச. "திணைவிரவெண்ணுப்பெயர்."

"தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்" என்புழி வருதல்வினை மூன்றற்குமுண்மையான், ஆண்டமைக்க வேண்டுவதின்று. இனியம்முப்பொருளின் வினையாகிய வந்தென்னுஞ் செய்தெனெச்சம் உண்டானென்னுமொன்றன் வினைகொண்டு முடிதல் வினையெச்ச முடிபாராய்ச்சிக்கட் பெறற்பாலதாகலின், அதனையும் ஈண்டொன்றென முடித்தலாலமைத்தல் பொருந்தாமையறிக.

## ரு. "உவப்பினும்."

வேள் குரிசிலென்பன அஃறிணைவாசகமென ஈண்டு வழுவமைத்தார். மேற்பெயரியலுள் "நம்பி யாடூஉ விடலை கோவேள் குரிசில்" என உயர்திணை யாண்பாற்பெயருளெடுத்தோதியதனை மறந்தார்போலும், குடிமைநல்லன் ஆண்மைநல்லனென ஈறு திரியாது நின்றுங்கு நின்று குடிமை ஆண்மை முதலியன உயர்திணைமுடிபு கொள்ளுமெனவும், அது வழாநிலையாமெனவுங் கூறினர். ஆசிரியர், தொல்காப்பியனர் "உயர்திணை மருங்கி னிலையின வாயினு—மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்றதனல் அவையுயர்திணை முடிபு கொள்ளாவென விலக்கப்பட்டமையானும், குடிமைநல்லன் ஆண்மைநல்லன் முதலிய வாய்பாடு இருவகை வழக்கினுமின்மையானும், அது பொருந்ாதெனை மறுக்க. "நின்றுங்கிசைத்த லிவணியல் பின்றே," இசைத்தலு முரிய வேறிடத்தான" என்னுஞ் சூத்திரங்கட்குப் பொருளறியாது உரையாசியரை யுள்ளிட்டோரெல்லாம் "அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்பதனேடு மாறுகொள்ளவுரைத்தார். அது பொருந்தாமையறிக. இவ்வாறின்னுமெடுத்து விரிக்கிற்பெருகும். ஆங்காங்குய்த்துணர்க.

பொதுவியன் முற்றிற்று.

சொல்லதிகாரமுடிந்தது.

இலக்கணவிளக்கச்சூறுவளி முற்றும்.

---

௭.

ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராக ரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியில் அற்புதத்
தொருவடிவு கொண்ட ருளியே
பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகை யாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேரு வாகி
ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமா கியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதை மாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நி தியிலோர்
மணிவிளக் கெனவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்கு வாமே.

—தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர்